Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 தை 24 சனிக்கிழமை (07.02.2015) பக்கங்கள் 20 ஓசை – 130

## சந்திரிக்காவின் மகன் அரசியலில் குதிக்கிறார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் மகன் விமுக்தி குமாரதுங்க நாளை தனது அரசியல் பயணத்தை ஆரம்பிக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமுக்தி கம்பஹா மாவட்டத்தில் தனது அரசியலை ஆரம்பிக்க உள்ளார். கம்பஹா மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வைபவம் நாளை நடைபெறவுள்ளதுடன் அதில் விமுக்தி குமாரதுங்க கலந்து கொள்ளலாம் என கூறப்படுகிறது.

இந்த வைபவத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஒழுங்கு செய்துள்ளதுடன் அதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்கிறார்.

நிட்டம்புவ விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த வைபவத்திற்கு முன்னர்

19 ஆம் பக்கம் பார்க்க

## புதிய அரசின் சவால்கள் வொஷிங்டனில் கருத்தாய்வு

### அமைச்சர் மங்கள முக்கிய உரை

(கொழும்பு)

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உள்ள உறவுகள் தொடர்பிலும் புதிய அரசின் சவால்கள் தொடர்பிலும் இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.30 மணியிலிருந்து 7.30 மணி வரை வொஷிங்டனில் தேசிய மாநாட்டு கழகத்தில் நடைபெறவுள்ள விசேட கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொள்ளவுள்ளார்.

தனது பதவியை பொறுப்பேற்ற பின்னர் அவரது அமெரிக்காவுக்கான முதலாவது விஜயம் இதுவாகும். அத்துடன் இவ் விஜயத்தின் போது அமைச்சருக்கும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரியுடனான சந்திப்புக்கும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தின் கீழ் வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர

19 ஆம் பக்கம் பார்க்க

# நடக்காது படைக்குறைப்பு முகாம்களும் மூடப்படமாட்டாது

### யாழ். வந்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தகவல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களைப் போன்று ஏனைய மக்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட இராணுவ முகாம்கள் எந்தவிதத்திலும் அகற்றப்படாது என, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன நேற்று யாழில் தெரிவித்தார்.

பி.ப 2.30 மணியளவில் பலாலி படைத்தளத்திற்கு வருகை தந்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன அங்கு இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் ஹக்கீம் மீது சீற்றம் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம்

### கிழக்கில் நேற்று களேபரம்




(கொழும்பு)

பெரும்தொகையாக வாக்களித்த சாய்ந்தமருது மக்களின் எதிர்பார்ப்புக்களை புறந்தள்ளி, வாக்களிக்காத ஒருவரை கிழக்கு மாகாண முதலமைச்சராக நியமிக்கும் அமைச்சர் ஹக்கீமின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப்பகுதி மக்கள் நேற்று பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று ஜும்ஆ தொழுகையை அடுத்து சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல் முன் கூடிய பெருந்தொகையான மக்கள், அமைச்சர் ஹக்கீமின் கொடும்பாவியைத் தாங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## உள்நாட்டு விவகாரங்களில் சீனா தலையிட மாட்டாது



### கொழும்பு வந்த சீன அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சீன உதவி வெளிவிவகார அமைச்சர் லியூ ஜியன் சோ நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துப் பேசினார். ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

ஜனாதிபதி

19 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கு முதல்வர் பதவியேற்றார்

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஹாபிஸ் நசீர் அஹமட் நேற்று மாலை ஆளுநர் ஒஸ்டின் பெர்ணான்டோ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் இந்த பதவிப் பிரமாண நிகழ்வு இடம்பெற்றுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம்

19 ஆம் பக்கம் பார்க்க


## துப்பாக்கிச் சூட்டில் படை வீரர் மரணம்

(கொழும்பு)

காத்தான்குடி, 5 ஆம் குறிச்சிப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்றில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

5 ஆம் குறிச்சிப் பகுதியில் கடமையிலிருந்த மேற்படி இராணுவ வீரர், கடமையை முடித்துக் கொண்டு கோவில்குளம் இராணுவ முகாமை நோக்கி பயணித்துக்

19 ஆம் பக்கம் பார்க்க





அரச கலாபூஷணம் விருது பெற்று பருத்தித்துறைக்கு பெருமை சேர்த்த சாதனைக் கலைஞர்களை பருத்தித்துறை பிரதேச செயலகம் பாராட்டி நடாத்திய விழாவில், பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வசுகுணா சேனாதிராஜா உரையாற்றுவதையும், பராட்டிக் கௌரவிக்கப்பட்ட சாதனைக் கலைஞர்களையும் காணலாம். (01)

# குண்டும், குழியுமாகக் காணப்படும் அக்கராயன் வன்னேரிக்குளம் வீதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயனிலிருந்து வன்னேரிக்குளம் செல்லும் வீதி குண்டும் குழியுமாக மாறியுள்ளது. கிளிநொச்சி மேற்கில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் இறுதிக்கிராமமாக 62 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட இக்கிராமத்தில் 500 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன.

1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக்கிராமத்திற்கு இவ் 63 வருடகாலத்தில் ஒரு குறிப்பிட்ட காலம் மட்டும் நல்ல வீதி உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால கூடுதலான காலங்கள் குண்டும், குழியுமாகவே காணப்படுகின்றது.

கிளிநொச்சி நகரத்திலிருந்து 32 கிலோ மீற்றர் தூரத்தில் இக்கிராமம் உள்ளது. இக்கிராமத்திலுள்ள குளத்தினை நம்பி விவசாயத்தில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

போக்குவரத்துக்கு ஒழுங்கில்லாத வீதி எட்டாண்டு களாக மருத்துவர் இல்லாத மருத்துவமனை, ஆசிரியர் நெருக்கடியினை எதிர்கொண் டுள்ள வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் என்பவற்றிற்கு மத்தியிலேயே இக்கிராம மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராமத்தில் மருத்துவர் இல்லாததன் காரணமாக மகப்பேற்றிற்காக 10 கிலோமீற்றர் தூரத்திலுள்ள அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு மகப்பேற்றுக்குக்குரிய பெண்களை கொண்டு வரும் போது இடைவழியில் பிரசவம் நிகழ்ந்ததும் ஆபத்தான நோயாளர்கள் இடைவழியில் உயிரிழந்ததும், மீள்குடியேற்றத்தின் பின்னர் இக்கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.

வன்னேரிக்குளம் வீதி புனரமைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை கரைச்சி பிரதேச செயலகம் மற்றும் அரச செயலகக் கூட்டங்கள் மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் கோரிக்கையாக முன்வைக்கப் பட்டபோதிலும் இதுவரை புனரமைக்கப்படவில்லை. கிளிநொச்சியிலிருந்து திருமுருகண்டி வழியாக அக்கராயன்வரை வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. அக்கராயனிலிருந்து வன்னேரிக்குளம் வரையான வீதி புனரமைக்கப்படுவதன் மூலம் ஆரோக்கியபுரம், ஆனைவிழுந்தான்குளம், ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 குடும்பங்கள் கிளிநொச்சி நகரத்திற்கு வருகை தரவும், மாணவர்கள் கிராமங்களிலிருந்து நகரத்திற்கு வந்து கல்வி பயிலவும், விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்தவும் வழியேற்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (160)

# சிற்றூர்தி சங்க கட்டடத்திற்கு காரைநகரில் அடிக்கல் நாட்டல்

(காரைநகர்)



காரைநகர் தனியார் சிற்றூர்தி சங்கத்திற்கான கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா தனியார் சிற்றூர்திச் சங்கத்தின் தலைவர் சி.அரியரட்ணம் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் பிரதேசத்திற்கான அமைப்பாளரும், காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான வீ.கண்ணன் (ரஜனி) சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.

இந்த நிகழ்வில் தொழிலதிபர்களான இ.எஸ்.பி.நாகரத்தினம் மற்றும் வியாவில் ஐயனார் ஆலய தர்மகத்தாவும், தொழிலதிபருமான மகாராணி சோமசேகரம் ஆகியோரும் விருந்தினர்களாக பங்குபற்றினர்.

# சிறுவர்களின் உழவர் விழா

சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறுவர்களின் தைப்பூஜை உழவர் விழா கடந்த செவ்வாய்க்கிழமை நிலையத் தலைவர் இ.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, சிறார்கள் கலாசார உடையணிந்து பல்வேறு பாரம்பரிய நிகழ்வுகளில் ஈடுபடுவது போல் சித்தரித்து காட்டினர். அங்கு உரையாற்றிய நிலைய நிறுவுனர் கு. மகாலிங்கம் தனதுரையில் இயந்திர மயமாக்கப்பட்டு வரும் எமது வாழ்வில் எமது பாரம்பரியங்கள் மறக்கடிக்கப்பட்டு வருவது வேதனை தரும் விடயம். இச்சிறுவர்களுக்கு எமது பாரம்பரியத்தைக் காண்பிக்கும் முகமாக இந்நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது என அவர் மேலும் தனது உரையில் தெரிவித்தார். (11)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1133

திகதி 05.02.2015

வெற்றி எண்கள் — 03 17 58 64 — ஆங்கில எழுத்து R

ஜக்பொட் பரிசு ரூ. 1,25,12,020/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,25,12,020/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 13 | 50,000/= | ரூ. 6,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 243 | 1,000/= | ரூ. 2,43,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 435 | 1,000/= | ரூ. 4,35,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11105 | 60/= | ரூ. 6,66,300/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5883 | 40/= | ரூ. 2,35,320/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 144650 | 20/= | ரூ. 28,93,000/= |
| ஆங்கில எழுத்து | 20926 | 20/= | ரூ. 4,18,520/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,541,140/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா 12,795,480/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2015.02.09 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3817)


# DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | சனிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஒலிமயமான வாழ்வு |
| Am 07.00 | Morning Songs |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | ஆரோகனம் |
| Am 09.30 | My Styl |
| Am 09.55 | காலை செய்தி |
| Am 10.00 | ஆரோக்கியமான வாழ்வு |
| Am 11.00 | மக்கள் முகம் |
| PM 11.30 | I T.Com |
| PM 12.00 | காதல் கீதங்கள் |
| PM 12.30 | சிரிக்க சிரிக்க |
| PM 01.00 | மதிய செய்தி |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்தி |
| PM 04.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00 | அதிர்வுகள் |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தெரிந்தல் சொல்லுங்கல் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | இதய ஊஞ்சல் |
| PM 09.00 | ஆங்கில திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

ஓய்வு பெறும்போது

# சிரேஷ்ட பிரதி அதிபராக கடமையாற்றுபவரிடம் அதிபர்கள் பொறுப்புக்களை வழங்கவேண்டும்

## கல்வி அமைச்சு அறிவுறுத்து

அரச பாடசாலைகளில் சேவை யாற்றி ஓய்வு பெறும் அதிபர் கள் ஓய்வு பெற்றுச் செல்லும் போது தமது கடமைகளை சிரேஷ்ட பிரதி அதிபராக கடமை யாற்றும் இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தரிடம் கையளிக்கவேண்டும் என கல்வி அமைச்சினால் அறிவுறுத் தல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அரசாங்க பாட சாலைகளில் சிரேஷ்ட இலங்கை அதிபர் தரத்தைச் சேர்ந்த உத்தி யோகத்தர் இருகையில் ஓய்வு பெற்றுச் செல்லும் பாடசாலை அதிபர்கள் தமது கடமைகளை கனிஷ்ட தரத்தைச் சேர்ந்தோரி டமும் இலங்கை ஆசிரியர் சேவையை சேர்ந்தோரிடமும் ஒப்படைக்கும் முறையை பின் பற்றி வருவதால் நிர்வாக ரீதி யாக பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன. இத னைக் கருத்தில் கொண்டே கல்வி அமைச்சு குறித்த அறிவு றுத்தலை வழங்கியுள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க 2015/04 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் சகல மாகா ணக் கல்விப் பணிப்பாளர்க ளுக்கும் வலயக் கல்விப் பணிப் பாளர்களுக்கும் அனுப்பி வைத் துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

மேலும் இச்சுற்று நிருபத்துக் கமைய பாடசாலை பொறுப்புக் களை முறைகேடான விதத்தில் ஒப்படைக்கும் அதிபர்களின் ஓய்வூதியத்தை உடனடியாக நிறுத்துமாறும் அவர்களுக்கு எதிராக ஒழுககாற்று நடவ டிக்கை எடுக்குமாறும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் பணிக் கப்பட்டுள்ளனர்.

மேலும் பாடசாலை அதிபர்க ளின் ஓய்வு பெறும் ஒழுங்கை முறையாக இற்றைப்படுத்தி வலயக் கல்வி அலுவலகங்க ளில் பதிவேடுகளை பேணுமாறும அப்பதிவேடுகளின் அடிப்படை யில் ஒரு அதிபர் ஓய்வுபெறுவ தற்கு மூன்று மாதங்களுக்கு முன் விண்ணப்பங்களைக் கோரி ஓய்வுபெறும் தினத்தன்று புதிய அதிபரை நியமிக்க மாகாண வலய கல்விப் பணிப்பாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாடசாலைக ளில் பதில் அதிபர்கள் எவரும் நியமிக்கப்படக் கூடாது எனவும் நிரந்தர இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களை மாத்திரம் பாடசாலை பொறுப்பதிகாரிக ளாக நியமிக்க வேண்டும் என வும் சகல நியமனங்களும் வெளிப்படைத்தன்மையுடன் கையாளப்படவேண்டுமெனவும் கல்வி அமைச்சினால் அறி வுறுத்தப்பட்டுள்ளது.

# நிரந்தர வீடுகளை வழங்க முன்னோடிக் கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் சில கிரா மங்களுக்கான நிரந்தர வீடுகளை வழங்குவதற்கான முன்னோடிக் கூட்டமொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.


பிற்பகல் 2 மணியளவில் பிரதேச செயலர் ஆர்.குருபரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பண்டாரவன்னியன் கிராமத்திற்கு .56 வீடுகளும், பேராறுக்கிராமத்திற்கு 41 வீடுக ளும், புளியங்குளம் கிராமத் திற்கு 42 வீடுகளும், கூழா முறிப்புக்கிராமத்திற்கு 39 வீடு களும், கணேசபுரம் கிராமத் திற்கு 18 வீடுகளும் அமைப்பதற கான முடிவுகள் எடுக்கப்பட்டன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் இவ்வீடு கள் அமைக்கப்படவுள்ளன. இக் கூட்டத்தில் ஒட்டுசுட்டான் பிர தேச செயலக உதவித்திட்ட மிடல் பணிப்பாளர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரி கள், கிராம அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர். (160)

# வீட்டுத் திட்டத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செய லகத்திற்குட்பட்ட பொன்நகர் கிராமத்தில் குடிநீர் மற்றும் குளிப்பதற் கான நீர் இல்லாமையினால் கிராம மக்கள் வெளியிடங்களில் இருந்தே குடிநீரைக் கொண்டு வருவதுடன், தமது உறவினர் வீடு கள் மற்றும் பொதுக்கிணறுகள் என்பவற்றிற்கு சென்று ஏனைய நீர்த்தேவைகளை நிறைவேற்றி வருவதாகவும் தெரிவித்துள்ளது டன் 50 வீட்டுத்திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை உடனடி யாக நிவர்த்தி செய்து தருமாறும் அக்கிராம மக்கள் கோரிக்கை விடுக் கின்றனர். இப்பகுதியிலுள்ள வீதியானது மழை காலங்களில் வெள்ளநீர் தேங்கி காணப்படுவதுடன், வெயில் காலங்களில் தூசி நிறைந்து புகை மண்டலமாகவும் காட்சியளிப்பதாக மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். யுத்தம் நிறைவுக்கு வந்து நாட்டில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படும் நிலையில் இன்று கிராமப்புறங்களில் வீதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்ன மும் அபிவிருத்தி செய்யப்படாமை குறித்து மக்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே, குறித்த கிராமத்தில் காணப்படும் சகல குறைபாடுகளை யும் உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.





காரைநகர் புதுறோட் சந்திக்கு அருகாமையில் கிழவன்காடு கலாமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்ட மனோன்மணி கலை அரங்கு மங்கள விளக்கேற்றி திறந்து வைக்கப்படுவதையும் மண்டபத்தின் அமைப்பினையும் காணலாம். (50)

# பொதுக்கிணறு இடிந்து வீழ்ந்ததில் 40 குடும்பங்கள் நெருக்கடியில்




(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் மேற்கிலுள்ள இம்மாஸ்நகரில் உள்ள பொதுக்கிணறு இடிந்து வீழ்ந்ததில் 40 வரையான குடும்பங்கள் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர். கோடைகாலத் திலும் அக்கராயனில் கடும் வறட்சி ஏற்பட்ட சூழலிலும் இக்கிணற் றிலிருந்து மக்கள் தொடர்ச்சியாக குடிநீரைப் பெற்றுக்கொண்டார்கள்.

சிறந்த நீர் ஊற்றுக்கொண்ட இக்கிணறு நீண்டகாலமாக புனர மைக்கப்படாமல் இருந்ததன் காரணமாக இடிந்துவிழும் நிலையில் இருந்தபோது பொது அமைப்புகளிடமும், உயரதிகாரிகளிடமும் இக்கிணற்றினை புனரமைத்துத் தருமாறு கேட்டும் கிணறு புனர மைக்கப்படவில்லை. இந்நிலையில் கிணறு தற்போது முற்றாக இடிந்துவீழ்ந்துள்ளது.

இதன் காரணமாக 40 குடும்பங்கள் குடிநீர் பெறுவதில் இடர் களை எதிர்கொண்டுள்ளன இதேவேளை 04 வரையான குடும்பங் கள் இக்கிணற்றிலிருந்தே குடிநீரைத் தொடர்ச்சியாகப் பெற்றும் வருகின்றன. (160)

# முல்லை - அம்பலப்பெருமாள் குளத்தில் புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தம்



(முல்லைத்தீவு)

மீள்குடியேற்ற ஆரம்ப காலத் திலிருந்து என்ரிப் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு அம்பலப்பெரு மாள் குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந் தன. ஆனால் தற்போது இப்புன ரமைப்புப் பணிகள் இடைநிறுத் தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

சுமார் 600ஏக்கர் நிலப்பரப் புக்கு நீர்ப்பாசனம் செய்யககூடிய இக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் 50 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

ஒப்பந்தகாரர்களின் இழுத் தடிப்பால் வேலைகள் ஒழுங் காக இடம்பெறாததன் காரண மாக குளத்தின் புனரமைப்புப் பணிகள் சுமார் ரூபா. இருபத் தைந்து மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்ட நிலையில் வேலைகள் தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ளன.

குளத்தில் அலைகற்கள் அடுக்கப்பட்டுள்ளன. குளத்தின் அணைக்கட்டுக்கு குவிக்கப்பட்ட மண் மழைக்கு கரைந்து குளத் தின் உட்பகுதியினை அடைந் துள்ளதுடன் குளத்தின் வான் பகுதி மற்றும் வாய்க்கால்கள் என்பன புனரமைக்கப்படவேண்டி யுள்ளன.

அம்பலப்பெருமாள்குளம் முழுமையாக புனரமைக்கப்படுமா என முல்லைத்தீவு வவுனிக் குளம் நீர்ப்பாசனப் பொறியிலா ளர் பாக்கியராசா விகர்ணனிடம் கேட்டபோது குளத்தினை முழு மையாகப் புனரமைப்பதற்கு முல் லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் ஊடாக வடமாகாண விவசாய அமைச்சிற்கு ரூபா. இருபத்தைந்து மில்லியன் வரை யான உதவிகோரி கடிதம் அனுப் பியுள்ளோம். நிதியுதவி கிடைத் தவுடன் அம்பலப்பெருமாள்குளம் முழுமையாகப் புனரமைக்கப்படு மென தெரிவித்தார்.

இக்குளம் புனரமைக்கப்படும் போது 900 ஏக்கர் வரையான நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசனம் செய்யப்படும். தற்போது இக் கிராமத்தில் 110 வரையான குடும் பங்கள் இக்குளத்தினையே நம்பி விவசாய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது என்றார். (160)

# 137 ஆசிரியர்கள் கிளி.யில் நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு 137 ஆசிரியர்கள் பிறமாவட் டங்களிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேள் தெரிவித்தார்.

இவ் ஆசிரியர்களில் 30 பேர் நேற்றுமுன்தினம் பணிகளைப் பொறுப்பேற்றுள்ளதாகவும் வருகை தரவுள்ள ஆசிரியர்கள் பாடரீ தியான விபரங்களைப் பெற்றுக்கொண்டு கிளிநொச்சி மேற்கின் வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம், ஜெயபுரம் மகா வித்தியா லயம், கிராஞ்சி அ.த.க.பாடசாலை போன்ற ஆசிரிய நெருக்கடி நிலவுகின்ற பாடசாலைகளுக்கு பணிக்கு நியமிக்கப்படவுள்ள தாகவும் வலயக்கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (160)

கல்வியின் பயன்: எதையும் கோபப்படாமலும், தன்னம்பிக்கையை இழக்காமலும் செவிசாய்க்கும்திறனே - ராபர்ட்பிராஸ்ட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நம்மைப் புதுப்பிக்க முடியுமா?

நமது துன்பங்கள் அவலங்களுக்கு நாம் யார் யாரையெல்லாம் காரணமாய்ச் சொல்லி வந்திருக்கிறோம். சிறிது பின்னோக்கிப் பார்க்கலாம்.

1985-ல் அநுராதபுரத்தில் சிங்களப் பொதுமக்களைப் படுகொலை செய்வதை ஆரம்பித்து, ராணுவத்தின் தாக்குதல்களுக்காகப் பழிவாங்குவதாகச் சொல்லி 1987-ல் அரந்தலாவையிலும் பின்னர் 'பரணையிலும் பொதுமக்களைக் கொன்று குவித்ததன் மூலம் சிங்களவர்கள் அனைவருமே நம் எதிரிகள்தான் என்று அறிவித்தோம்.

நம் போராட்டத்தை ஆதரித்து பயங்கரவாதத்தை விமர்சித்த சிங்களப் புத்திஜீவிகள் இடதுசாரிகள் கல்விமான்களையும் எதிரிகளாகக் கட்டமைத்துக் கொண்டோம். அவர்கள் விமர்சனங்கள் எங்களுக்கு வேம்பாகக் கசந்தன.

1990-ல் முஸ்லிம்கள் நமக்கு எதிரியாகி விட்டார்கள் என்று கூறி, ஒரே இரவில் யாழ்ப்பாணத்திலிருந்து அந்த சமூகத்தையே அப்புறப்படுத்தினோம். காத்தான்குடிப் பள்ளிவாசல் புகுந்து வழிபாட்டில் இருந்தவர்களைக் கொலை செய்தோம். ஏறாவூரிலும் அழிஞ்சிப்பொத்தானையிலும் முஸ்லிம் பெண்கள் சிறுவர் வயோதிபரையும் படுகொலை செய்து எங்கள் விரோதிகள் என்று அறிவித்தோம்.

அரசாங்கத்தோடு அமைச்சராகச் சேர்ந்து செயற்பட்ட தொண்டமானையும், மலையக மக்களையும் எங்கள் துயர் தீர்க்க உதவாத காட்டிக்கொடுப்பாளர்கள் என்று விலக்கினோம்.

இவ்வளவுக்குப் பிறகும் எங்கள் துன்பங்களுக்குக் காரணங்களை உலகெங்கும் தேடுவதை நாம் நிறுத்தவில்லை.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் மட்டும் எங்களுக்கு எதிரிகளாகவில்லை, ரஷ்யாவும் சீனாவும் கியூபாவும் கூட எதிரிக்கே நண்பர்கள் என்றானார்கள். ஈரான், லிபியா, வியட்நாம், பங்களாதேஷிடமும் கூட எங்கள் நியாயம் எடுபடாமல், எதிரிகள் பட்டியலிலேயே சேர்க்க வேண்டியிருந்தது.

நம் துன்பங்களுக்கெல்லாம் பெரிய காரணம் இந்தியாதான் என்றும், அதுவும் எதிர்க்கப்பட வேண்டியதுதான் என்று போரிட்டும் கொலை செய்தும் தீராத பகையாக்கிக் கொண்டோம். பாகிஸ்தானும் நமது பகையாளி லிஸ்டில்தான் இருந்தது.

இந்த நாட்டில் தமிழினம் படும் துன்பங்களுக்கெல்லாம் காரணமாய் ஒட்டுமொத்த உலக நாடுகள் மட்டுமல்லாமல் உள்ளுக்குள்ளும் தினம்தினம் எதிரிகள் உற்பத்தியாகியபடியே இருந்தார்கள்.

தமிழர்களுக்கு ஒரே கட்சிதான் இருந்தாக வேண்டும். ஏனைய கட்சிகள், அமைப்புகள், மூத்த அரசியல்வாதிகள், இடதுசாரிகள், விமர்சனம் வைத்த புத்திஜீவிகள் மாணவர்கள்... என மாற்றுக் கருத்துள்ளவர் யாராயிருந்தாலும் துரோகிகள்தான்.

நம் துன்பங்களுக்கும் அழிவுகளுக்கும் காரணமான மாற்று இனத்தவர்கள், அயலிலுள்ள தாய்நாட்டார், சர்வதேச சமூகத்தார் என்று எல்லா எதிரிகளுமே நம்மைக் காப்பாற்றக் கூப்பிட்டவுடன் ஓடிவராமல், ஈழத்தமிழினத்திற்கு எல்லோரும் எதிரிகள்தான் என்று காட்டிக் கொண்டார்கள்.

கடைசியில் தமிழினத்தின் ஒட்டுமொத்த பகைவடிவம் மகிந்த ராஜபக்ச தான் என்று கண்டு, போர்க்குற்ற விசாரணையும் தண்டனையும் வாங்கிக் கொடுத்துவிட்டால், எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு வந்துவிடும் என்று நினைத்தோம்.

போர்க்குற்ற விசாரணை இன்றியே தெற்கில் மாற்றத்தைக் கொண்டுவந்து விட்டோம். மன்னிக்க முடியா எதிரி மகிந்தவிடம் இப்போ எந்த அதிகாரமும் இல்லை. ஆனால் என்ன கொடுமை.... புதிதாய் நாம் கொண்டுவந்தவர்களும் நமக்கு எதிரிகள்தான் என்று சொல்ல வேண்டியதாகியிருக்கிறது நிலைமை!

நம் துன்பங்களுக்கான காரணத்தை மேலும் யாரிடம் எல்லாம் தேடவேண்டி வரும் என்று தெரியவில்லை. நமது துயர்களுக்கான காரணத்தை வெளியே தேடி, ஒவ்வொருவரையும் எதிரிகளாக்கி கொண்டே வந்த நாம், ஒருவேளை காரணம் நம்மிடம் இருக்குமா என்பதை யோசிக்கவே மறந்துவிட்டோம். - *ஆசிரியர்*

# வடக்கு மாகாணத்திலேயே போலி வைத்தியர்கள் அதிகம்

(கொழும்பு)

வடமாகாணத்திலேயே அதிகளவில் போலி வைத்தியர்கள் உள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் நளின் டிசொய்சா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

22,313 வைத்தியர்களை ஆய்விற்கு உட்படுத்திய நிலையில் 5,026 போலி வைத்தியர்கள் தொடர்பான தகவல்கள், 5 மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

வடக்கு, மேல், தெற்கு, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

மாகாண ரீதியாக நோக்கும் போது, வட மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையான போலி வைத்தியர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஐந்து மாவட்டங்களிலும் அடையாளம் காணப்பட்டுள்ள போலி வைத்தியர்களில் 32.5% வட மாகாணத்தில் இருப்பதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஐந்து மாவட்டங்களிலும் சராசரியாக ஐந்து வைத்தியர்களில் ஒருவர் போலியானவர் என்ற தகவல் கண்டறியப்பட்டுள்ளது.

போலி வைத்தியர்களை கைது செய்து அவர்களுக்கு குறைந்த பட்சம் ஐந்து வருட சிறைத் தண்டனையாவது விதிக்கப்படும் வகையில் சட்டம் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சரிடம் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

# புலிகளின் ஆதரவாளர்களுக்கு சார்பாக நடக்கிறது அரசு

## குற்றம் சாட்டுகிறது விமலின் கட்சி

(கொழும்பு)

விடுதலைப் புலி ஆதரவாளர்களுக்கு சார்பான முறையில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக விமல் வீரவன்ச தலைமையிலான ஜே.என்.பி. கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

வடக்கின் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் முக்கியமான சோதனைச் சாவடியான ஓமந்தைச் சோதனைச் சாவடியின் சோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் ஜே.என்.பி.யின் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களான டொனால்ட் ஞானகோன், சனல் - 4 ஊடகத்தின் பணிப்பாளர் கலம் மக்ரே போன்றவர்கள் எவ்வித தடையும் இன்றி பண்டாரநாயக்க விமான நிலையத்தின் ஊடாக யாழ்ப்பாணம் சென்றடையக் கூடிய வகையில் பாதுகாப்பு தளர்த்தப்பட்டுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழகத்தில் தங்கியிருக்கும் அகதிகளுக்கும் இவ்வாறான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். வடக்கின் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றும் முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி புலி ஆதரவாளர்களின் விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்ற சிரத்தை காட்டி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால வரவு - செலவுத் திட்டம் ஓர் கண்துடைப்பு நாடகம்; என அவர் தெரிவித்துள்ளார்.

மிக முக்கியமான அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். கொத்தமல்லி போன்றவற்றின் விலைகளை குறைப்பதனால் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# இலஞ்ச, ஊழலுக்கு எதிராக தொழிற்சங்கங்கள் முறையீடு

இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பு, மோசடி எதிர்ப்பு முன்னணி மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் என்பன இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளன.

மின்சார சபையின் முன்னாள் பொது முகாமையாளர் உள்ளிட்ட மேலும் சிலர், வேதன அதிகரிப்பின் போது, நிதி மோசடி செய்துள்ளதாகக் கூறி இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பு முறைப்பாடு ஒன்றை முன்வைத்துள்ளது.

இதேவேளை, முன்னாள் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் முன்னாள் கல்வியமைச்சின் செயலாளருக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு ஒன்றை முன்வைத்துள்ளது.

மோசடி எதிர்ப்பு முன்னணி நேற்றுமுன்தினம் பிற்பகல் ஊழல் மற்றும் மோசடி ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

அந்த முன்னணி முன்வைத்த முறைப்பாடு தொடர்பில், கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு முன்னெடுக்கும் செயற்பாடுகள் தாமதமாவதாக தெரிவித்தே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், சட்டத்தரணி சிரால் லக்திலக, உலபனே சுமங்கல தேரர் மற்றும் நிஷாந்த சிறிவர்ணசிங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதுதவிர, இலங்கை வங்கியில இடம்பெற்ற மோசடி மற்றும் தேசிய கடதாசி நிறுவனத்தில் இடம் பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் ஊழல் எதிர்ப்பு முன்னணி முறைப்பாடு ஒன்றை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அல் கொய்தாவை தடைசெய்ய புதிய சட்டமூலம் விரைவில்

(கொழும்பு)

அல் கொய்தா தீவிரவாத இயக்கத்தை தடை செய்ய இலங்கையில் புதிய சட்டமொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது.


ஐக்கிய நாடுகள் சட்டத்தின் அடிப்படையில் இலங்கையில் அல் கொய்தா இயக்கத்திற்கு தடை விதிக்கப்படவுள்ளது.

அல், கொய்தா மற்றும் தலிபான் ஆகிய தீவிரவாத இயக்கங்களை தடை செய்யும் நோக்கில் இந்த ஐக்கிய நாடுகள் சட்டத்தில் திருத்தம் செய்யப்படவுள்ளது.

தடை விதிப்பது குறித்த விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸினால் கையொப்பமிடப்பட்டுள்ளது. கடந்த டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி இது குறித்த ஆவணத்தில் முன்னாள் அமைச்சர் பீரிஸ் கையொப்பமிட்டுள்ளார்.

அல் கொய்தா இயக்கத்திற்கு எந்த வகையிலும் இலங்கையில் ஆதரவோ உதவிகளோ வழங்கக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அல் கொய்தா மற்றும் தலிபான் அமைப்புக்களின் சொத்துக்களை முடக்குவதற்கு இலங்கை நிதிப் புலனாய்வுப் பிரிவினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.




# கிழக்கில் உருவாகும் தமிழ்-முஸ்லிம் இனக்குரோத அரசியல் ஆரோக்கியமானதல்ல

## எழுகதிரோன் கட்டுரையிலிருந்து

**தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் முஸ்லிம் காங்கிரசும் மீண்டும் வேதாளத்தை முருங்கை மரத்தில் ஏற்ற முனைவது வேதனைக்குரியது. விட்டுக்கொடுப்புகளும் சமரசங்களுமே சமாதான சகவாழ்வின் அடிப்படைகள் என்பதை இவ்விரு கட்சிகளும் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. இரண்டாவது கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்தபோது முஸ்லிம் காங்கிரசுக்கு முதலமைச்சர் பதவியை விட்டுத்தருகின்றோம் என்று சொன்னமை சந்திரகாந்தனை ஓரம்கட்டும் நயவஞ்சக நோக்கம் கொண்டது என்பது கூட்டமைப்பினர் இப்போது அதை கறாராக மறுப்பதன் ஊடாக அம்பலமாகின்றது.**

அண்மைக்காலமாக இலங்கையில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்கள் கிழக்கு மாகாணத்திலும் ஒரு அரசியல் ஸ்திரமற்ற தன்மைக்கு வழி வகுத்துள்ளன. ஜனாதிபதி தேர்தலின் போது இன்றைய ஜனாதிபதி தொடக்கிவைத்த கட்சித்தாவலானது மத்திய ஆட்சியில் மட்டுமன்றி மாகாண சபை ஆட்சிகளிலும் பல ஆட்சிமாற்றங்களுக்கு வழிகோலியுள்ளது.

குறிப்பாக ஜனாதிபதி தேர்தலின் போது இடம்பெற்ற கட்சி தாவல்கள் கிழக்கு மாகாண சபையின் ஆட்சியில் பெரும் குழப்பநிலையை தோற்றுவித்துள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் பங்காளிக் கட்சியாக இருந்த முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை(முஸ்லிம்) மக்கள் காங்கிரஸ் என்பன ஜனாதிபதி தேர்தலில் எதிரணி வேட்பாளரை ஆதரித்தமையால் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் கிழக்கில் இடம்பெற்ற கூட்டாட்சி தொடர்வது கேள்விக்குறியாகியது.

இந்நிலையில் கிழக்கில் தாம் ஆட்சியமைக்க 11 உறுப்பினர்களை கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினர் முயன்றனர். அதற்காக 7 உறுப்பினர்களைக் கொண்ட முஸ்லிம் காங்கிரசுடன் பேச்சு வார்த்தை நடத்தினர். இந்த இரு கட்சிகளும் இனவாத அணிதிரட்டல்களை நம்பியே அரசியல் செய்வதால் தமிழ் முதலமைச்சரா? முஸ்லிம் முதல்மைச்சரா? என்ற பிரச்சினைகளைத் தூண்டி விட்டன. இருதரப்பிலும் உணர்வுகள் கிளறி விடப்பட்டன.

இது துரதிஷ்டமான ஒரு நிகழ்வாகும். கடந்த காலங்களில் புலிகள் கைக்கொண்டிருந்த முஸ்லிம் விரோதப் போக்கு கிழக்கில் ஒரு பெரும் இரத்த ஆறினை ஓடச்செய்ததை நாம் மறந்துவிட முடியாது. தமிழர்களை முஸ்லிம்களுக்கு எதிராகவும் முஸ்லிம்களை தமிழர்களுக்கு எதிராகவும் தூண்டிவிட்டதனால் இருதரப்பிலும் பலநூறு உயிர்கள் பலியிடப்பட்டன.

சந்திரகாந்தன் முதலமைச்சரானவுடன் ஏறாவூரிலும் காத்தான்குடியிலும் பெரும் வன்முறைகள் தூண்டிவிடப்பட்டன. இதன் பின்னணியில் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் இருந்தனர். ஆனாலும் அதாவுல்லா போன்ற முஸ்லிம் தலைவர்கள் "தமிழர்களுக்கு முதலமைச்சர் பதவியை விட்டு கொடுத்தோம் என்று பெருமைப்படுவோம் அடுத்த முறை முஸ்லிம் ஒருவரை முதலமைச்சராக தமிழர்கள் விட்டுத் தரட்டும் என்று முஸ்லிம்களை நோக்கி அறைகூவல் விடுத்தார். அவர்களை அமைதி காக்க சொன்னார்.

கிழக்கில் முதலமைச்சராவது தமிழரா முஸ்லிமா என்பதல்ல பிரச்சினை "கிழக்கு கிழக்காக இருக்கட்டும்" என்கின்ற கோஷத்துடன் முஸ்லிம் தேசிய காங்கிரஸ் முதலமைச்சர் சந்திரகாந்தனை வாழ்த்தியது. இப்படியான ஒரு இணக்கப்பாட்டை பழம் பெரும் கட்சிகளான தமிழ் தேசிய கூட்டமைப்பினராலும் முஸ்லிம் காங்கிரசினராலும் இன்றும் கூட அடைய முடியவில்லை வெட்கத்துக்குரிய விடயமாகும்.

இப்படியாகத்தான் மெது மெதுவாக கிழக்கின் இன ஒற்றுமை மீள உருவானது. இப்போது கிழக்கு மாகாணம் நான்கு இனங்களின் சங்கமம் என்கின்ற மனநிலை வளர்ந்து வருகின்றது. எல்லோரும் சகவாழ்வில் ஒன்றித்து வருகின்றார்கள். சாமானிய மக்கள் இனக்குரோத உணர்வுகளை மறந்து தத்தம் வாழ்க்கைப் போராட்டத்தில் ஒருவரோடு ஒருவர் இணைந்து கலந்தும் வாழ தலைப்பட்டுள்ளனர். போருக்கு பின்னர் இந்த நிலைமைகளை மீண்டும் கொண்டுவருவதற்காக முதலாவது கிழக்கு மாகாண சபை ஆட்சியாளர்கள் பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இந்த நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் முஸ்லிம் காங்கிரசும் மீண்டும் வேதாளத்தை முருங்கை மரத்தில் ஏற்ற முனைவது வேதனைக் குரியது. விட்டுக்கொடுப்புகளும் சமரசங்களுமே சமாதான சகவாழ்வின் அடிப்படைகள் என்பதை இவ்விரு கட்சிகளும் உணர்ந்துகொண்டதாக தெரியவில்லை. இரண்டாவது கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்தபோது முஸ்லிம் காங்கிரசுக்கு முதலமைச்சர் பதவியை விட்டுத்தருகின்றோம் என்று சொன்னமை சந்திரகாந்தனை ஓரம்கட்டும் நயவஞ்சக நோக்கம் கொண்டது என்பது கூட்டமைப்பினர் இப்போது அதை கறாராக மறுப்பதன் ஊடாக அம்பலமாகின்றது.

முதலமைச்சரை அடைவதில் இரு கட்சிகளும் முரண்பட்டுக்கொண்டு ஜனாதிபதி மைத்திரியிடம் தனித்தனியாக மண்டியிட்டுள்ளன. அன்றைய ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் இணைந்து சந்திரகாந்தன் ஆட்சியமைத்தமையை "ஒட்டுக்கட்சிகள்" என்று சித்தரித்திருந்தார் சம்பந்தன். அது கேவலமென்றால் இன்று அதே முதலமைச்சர் பதவிக்காக ஜனாதிபதியின் காலடிக்கு சென்று கூட்டமைப்பினர் கெஞ்சுவது அதைவிட கேவலமானதாகும்.

இறுதியாக கடந்த அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்த பிரகாரம் முதல் இரண்டரை வருடங்களுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் அடுத்த இரண்டரை வருடங்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் முதலமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என்ற இணக்கப்பாடு உள்ளது. இந்நிலையில் மத்தியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகியபோதும் மாகாணத்தில் பழைய ஒப்பந்தத்தை பேணுவதன் ஊடாக கிழக்கில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியை தொடர்வது என்னும் நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துள்ளது.

**முதலமைச்சரை அடைவதில் இரு கட்சிகளும் முரண்பட்டுக் கொண்டு ஜனாதிபதி மைத்திரியிடம் தனித்தனியாக மண்டியிட்டுள்ளன. அன்றைய ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் இணைந்து சந்திரகாந்தன் ஆட்சியமைத்தமையை "ஒட்டுக்கட்சிகள்" என்று சித்தரித்திருந்தார் சம்பந்தன். அது கேவலமென்றால் இன்று அதே முதலமைச்சர் பதவிக்காக ஜனாதிபதியின் காலடிக்கு சென்று கூட்டமைப்பினர் கெஞ்சுவது அதைவிட கேவலமானதாகும்.**

புதிய ஜனாதிபதியே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக உள்ள காரணத்தால் மிகவும் இராஜ தந்திரமாக முஸ்லிம் காங்கிரஸ் காய்களை நகர்த்துவதில் வெற்றிகண்டுள்ளது. இது பற்றிய இணக்கப்பாட்டை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கியுள்ளது. முஸ்லிம் முதலமைச்சரை அடையும் முயற்சியில் ஏறக்குறைய முஸ்லிம் காங்கிரஸ் வெற்றிகண்டுள்ளது.

இன்றைய ஜனாதிபதியின் வெற்றிக்கு தமிழ் மக்களின் லட்சக்கணக்கான வாக்குகளை வழங்க கோரியவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பினரே ஆகும். ஆனால் அதே ஜனாதிபதி தலைமையிலான புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கிழக்கில் ஆட்சியமைப்பதென்பது ஏன். கூட்டமைப்பினரால் முடியாமல் போனது? என்கின்ற கேள்வி எழுகின்றது. இதற்கு மூன்று காரணங்கள் மட்டுமே இருக்கமுடியும்.

- ஒன்று கடந்த காலங்களில் இணக்க அரசியல் செய்தவர்களை துரோகிகள் என்று வசைபாடி வந்தமையால் தாங்கள் அதே பாதையை பின்பற்ற தொடங்குவதில் தயக்கம் இருந்திருக்கலாம்.

- அல்லது அறுதிப் பெரும்பான்மையை வைத்துக்கொண்டே வட மாகாண சபையை நடத்தமுடியாது திண்டாடுவதற்கு காரணமான உட்கட்சி பூசல்களுக்கு பயந்து கிழக்கில் ஆட்சியமைப்பதைத் தவிர்த்தனரா?

- அன்றி யாராவது ஆட்சியமைக்க வழிவிட்டு, எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துகொண்டு தொடர்ச்சியாக தமிழ் மக்களின் அவலநிலையை வைத்து எதிர்ப்பு அரசியல் பிழைப்பு நடத்துவதே சுகமானது என கணிப்பிட்டனரா?

எப்படியிருந்த போதிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பினரை விடுத்து முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைப்பது தற்போதைய நிலையில் (01-02-2015) உறுதியாகியுள்ளது. அது அவர்களின் சாணக்கியம். அல்லது கூட்டமைப்பினரின் கையாலாகத்தனம் எனலாம்.

தத்தம் இனம்சார்ந்து அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள முயலுவது அவரவர் உரிமைசார்ந்த விடயம். ஆனால் மற்றையோர் காரியம் சாதிப்பதை இனவாத ரீதியில் விமர்சிக்க முனைவது ஆபத்தானது. இப்போது தமிழ் தேசிய கூட்டமைப்பினர் முஸ்லிம்கள் மீதான காழ்ப்புகளைக் கொட்டத் தொடங்கியுள்ளனர். அது தமிழ் தலைவர்களின் அரசியல் வங்குரோத்து தனத்தின் வெளிப்பாடாகும்.

கிழக்கில் இருக்கின்ற கூட்டமைப்பின் அரசியல் முக்கியஸ்தர்கள் அனைவருமே, முஸ்லிம் முதலமைச்சர் நியமன செய்தி உறுதியானதும் கடந்த ஒரு சில நாட்களாக முஸ்லிம்கள் மீது சரமாரியாக குற்றச்சாட்டுக்களைச் சுமத்த தொடங்கியுள்ளனர்.

தமிழ் மக்களின் அவல நிலைக்கு நமது தெரிவுகளும் நமது அணுகுமுறைகளும் நமது தூரநோக்கற்ற பாதைகளும் காரணம் என்பதை இன்றுவரை இந்தத் தமிழ் தலைமை ஒப்புகொள்ள தயாரில்லை. மற்றையோரை நோக்கி சுட்டுவிரல் நீட்டுவதே தொடர்கிறது.

கிழக்கில் இன்று தோன்றியுள்ள முறுகல் நிலை நீடிப்பது கூடாது. முஸ்லிம் முதல்வர் ஒருவர் தெரிவானால் அதை ஏற்றுக்கொள்ளும் பக்குவமும் ஜனநாயக ரீதியில் அதனை எதிர்கொள்ளும் செயலூக்கமும் அவசியமானது. ஏனெனில் கிழக்கு பல்லினங்களின் பூமியாகும். இதனை தமிழ் முஸ்லிம் மக்கள், அரசியல் வாதிகள், புத்திஜீவிகள் போன்றோர் புரிந்து கொண்டு செயற்பட முன்வரவேண்டும். மிகப் பெரிய விலை கொடுத்து உருவாகியுள்ள கிழக்கு மாகாணசபையும் கிழக்கின் சமாதானமும் மீண்டும் கட்சிசார் நலன்களுக்காக பலியிடப்படுவதை மக்கள் அனுமதிக்க கூடாது.

# சீனாவின் கொழும்பு துறைமுக திட்டம் தொடர்ந்து நடாத்த அரசு அனுமதி

கொழும்புத் துறைமுக நகர கட்டுமானத் திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு புதிய அரசாங்கம், சீனாவின் தொடர்பாடல் கட்டுமான நிறுவனத்துக்கு அனுமதி அளித்துள்ளது.

1.4 பில்லியன் டொலர் செலவிலான இந்த திட்டத்தை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசாங்கத்துடன் செய்து கொண்ட உடன்பாட்டுக்கு அமைய, சீனா முன்னெடுத்து வந்தது.

ஆனால், தாம் ஆட்சிக்கு வந்தால், இந்த திட்டத்தை நிறுத்துவோம் என்று தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரம சிங்க, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், இந்த திட்டம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியான போதிலும், தொடர்ந்து கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வந்தன.

இந்தநிலையில், நேற்று முன் தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், இந்த திட்டத்தை தொடர்வதற்கு அனுமதி அளிப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.



அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன இந்த தகவலை நேற்று முன் தினம் கொழும்பில் செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

சீன அரசாங்கத்தினால் முதலீடு செய்யப்பட்டுள்ள இந்த வர்த்தக திட்டத்தை இந்தக் கட்டத்தில் இடை நிறுத்துவதால், சீனாவுடன் நீண்டகாலமாக கொண்டுள்ள உறவு தேவையின்றி பாதிக்கப்படும் என்று அரசாங்கம் கருதுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொழும்பு துறைமுக நகரத் திட்டம் தொடர்பாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த மாதம் சீனாவுக்கு மேற்கொள்ளவுள்ள பயணத்தின் போது, கலந்துரையாடுவார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டம் தொடர்பாக ஏற்கனவே, இலங்கைக்கான சீனத் தூதுவர் வூ ஜியாங்வோ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து பேச்சு நடத்தியதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்துக்கு இந்தியா அதிகார பூர்வமாக எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சீன நீர்மூழ்கிகள் இலங்கை கடற்பரப்புக்கு தொடர்ச்சியாக வருவது குறித்தே இந்தியா எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

# இலங்கையுடனான தொடர்புகள் மேலும் வலுப்படுத்தப்படும்

## சீன விசேட பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையுடனான தொடர்புகள் மேலும் வலுப்படுத்தப்படுமென சீன அரசின் விசேட பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான விஜயத்தில் ஈடுபட்டுள்ள சீன அரசாங்கத்தின் விசேட பிரதிநிதியும், அந்த நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சருமான லிவ் ஜியான்ச்சாவ் உள்ளிட்ட தூதுக் குழுவினர், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது இருதரப்பிலும் அரசியல், பொருளாதார மற்றும் கலாசார ரீதியான பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கு இந்த சந்திப்பின்போது சீனாவின் விசேட பிரதிநிதி வாழ்த்து தெரிவித்துள்ளார்.



அத்துடன் உயர்மட்டத்திலான விஜயங்களை முன்னெடுப்பதன் ஊடாக இரண்டு நாடுகளுக்கும் இடையில் நட்புறவு மற்றும் தொடர்புகளை மேலும் வலுப்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் லிவ் ஜியான்ச்சாவ் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமது இலங்கைக்கான இரண்டு நாள் விஜயத்தில், ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோரையும் சீன விசேட பிரதிநிதி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

# சுய தீர்மான அவகாசம் முன்னைய ஆட்சியில் இல்லை

## அமைச்சர் சஜித் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராபஜக்ஸ தலைமையிலான அரசாங்கத்தில் சுய தீர்மானம் எடுக்கும் அவகாசம் இருக்கவில்லை என வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பின் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஸ அரசாங்கத்தில் குடும்ப நண்பர்களுக்கு மட்டுமே கூடுதல் முன்னுரிமை அளிக்கப்பட்டது என அவர குறிப்பிட்டுள்ளார்.

தேசிய நலன்களுக்கு முக்கியதத்துவம் அளிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியஅவர் கொள்கைத் திட்டமிடல் அமு லாக்கத்திற்கு நல்லாட்சி மிகவும் அவசியமானது எனவும்

தேசிய நலன்களை கருத்திற்கொண்டு தீர்மானம் எடுக்கும் உரிமை நிபுணர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

# இராணுவ மயப்படுத்தலுக்கு தீர்வு நம்பிக்கையை தகர்த்த மைத்திரி

## என்கிறது ஏ.எப்.பி.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராணுவத்தை நாடு முழுவதும் நிலை கொள்ளச் செய்யும் விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளதன் மூலமாக தனது ஆட்சியில் இராணுவ மயப்படுத்தலுக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையை தகர்த்துள்ளார் என ஏ.எப்.பி. செய்திச்சேவை குறிப்பிட்டுள்ளது.

சிறிசேனவின் வெற்றி வடகிழக்கு உட்பட பல பிரதேசங்களில் இராணுவத்தினரின் பிரசன்னத்தை குறைக்கும் என்ற எதிர்பார்ப்பு காணப்பட்டது.

இவ்வாறான அதிகரித்த இராணுவ பிரசன்னம் ராஜபக்ச அரசாங்கத்தில் விசேடமான விடயமாக காணப்பட்டது.

தேர்தல் பிரச்சாரங்களின் போது சிறிசேன இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்குவதாகவும் அவசியமான சூழ்நிலைகளில் மாத்திரம் பயன்படுத்துவதாகவும் தெரிவித்திருந்தார்.

எனினும் தற்போது. இராணுவத்தை நிலை கொள்ளச் செய்வதற்காக மாதாந்தம் பிறப்பிக்கப்படும் ஆணையை அவர் புதுப்பித்துள்ளார். விசேட வர்த்தமானி அறிவித்தலில் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருமளவு இராணுவ பிரசன்னம் என்பது வடகிழக்கிற்கு சீற்றத்தை ஏற்படுத்தும் விடயம்,

யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்களின் பின்னரும் இராணுவத்தை நிலை கொள்ளச் செய்வதற்கான அவசியம் என்ன என்பதை ஜனாதிபதி தெளிவு படுத்த வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஸ் பிரேமசந்திரன் குறிப்பிட்டார்.

நான் இவ்வாறான அறிவிப்பிற்கான தேவையில்லை என உறுதியாக கருதுகிறேன்.

அவர் இந்த நிலையை மாற்றுவதாக உறுதியளித்தார் ஆனால் முன்னைய அரசாங்கம் செய்ததை அவர் செய்யமுனைந்தால் நாங்கள் மீண்டும் பழைய சூழ்நிலைக்கே தள்ளப்படுகிறோம் என்பதே அதன் அர்த்தம் என அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி படையினரை முகாம்களுக்குள் முடக்குவார் என எதிர்பார்த்தோம் என குறிப்பிட்டுள்ள சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளர் சுனில் ஜெயசேகர இது நிச்சயமாக ஒரு பின்னோக்கிய நடவடிக்கை என ஏ.எப்.பி. இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி செயலணிப்படை வரவேற்கிறது கூட்டமைப்பு

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி செயலணிப்படை ஒன்று உருவாக்கப்படவுள்ளதனை கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

இந்தப் படையணி, இனங்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள அவசர பிரச்சினைகளை இனங்கண்டு தீர்க்கும் முயற்சிகளை மேற்கொள்ளும் வகையில் அமைக்கப்படவுள்ளது.

நீண்டகாலமாக விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினையும் இதில் அடங்கும் என்று அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபரின் தகவல்படி 275 தமிழ் அரசியல் கைதிகள் விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் ஐந்து பிரிவுகளாக பிரித்து பிரச்சினைக்கு தீர்வை காணமுடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குறித்த படையணி, வடக்கு கிழக்கில் அபகரிக்கப்பட்ட காணிகளை மீட்டுக்கொள்ளல், பெண்களை தலைமைகளாக கொண்ட குடும்பங்களின் பிரச்சினைகளை தீர்த்தல், போரில் அங்கவீனமடைந்தவர்களின் பிரச்சினைகள் என்பவற்றுக்கும் தீர்வுகளை முன்வைக்க வேண்டும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்

# அகதிகள் விடயம் குறித்து ஐ.நா.அதிகாரிகள் பேச்சு



பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவன் விஜேயவர்த்தனவை நேற்று முன்தினம் சந்தித்த ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான பேரவை, அவருடன் தீர்க்கமான பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளது.

அமைப்பின் ஆசிய பசுபிக் வலய அதிகாரியான ஜொஸ்பா ஒஜானோ தலைமையிலான குழுவினரே, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவன் விஜேயவர்த்தனவை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது அகதிகள் மற்றும் இலங்கையின் அடைக்கலம் கோரியுள்ளோர் தொடர்பில் பேசப்பட்டுள்ளது. மேலும் புரிந்துணர்வுடன் விடயங்கள் ஆராயப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துளளது

# புலம்பெயர் சமூகத்தை அழைப்பது கைது செய்யும் நோக்கிலா?

## அரசை கேட்கிறார் புபுதுஜாகொட




கைது செய்யும் நோக்கிலா புலம்பெயர் சமூகத்தை அரசாங்கம் மீள அழைக்கின்றது என முன்னணி சோஷலிச கட்சியின் பிரசாரச் செயலாளர் புபுது ஜாகொட கேள்வி எழுப்பியுள்ளார்.

தமது கட்சியின் தலைவர் குமார் குணரட்னம் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குமார் குணரட்னம் தமது விஜயம் அரசியல் நோக்கத்திலானது என தெரிவித்த போதிலும், அதிகாரிகள் சுற்றுலா வீசாவையே அவருக்கு வழங்கியுள்ளதாக புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

வீசா சட்டங்களை மீறிச் செயற்பட்டமைக்காக குமார் குணரட்னத்தை நாடு கடத்த அதிகாரிகள் முயற்சித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

குமார் குணரட்னம் சுற்றுலாப் பயணி அல்ல என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே என அவர் தெரிவித்துள்ளார்.

குமார் குணரட்னம் விரும்பி நாட்டை விட்டு வெளியேறவில்லை எனவும் வெளியேற்றப்பட்டதாகவும் தெரிவித்த அவர்,

புலம்பெயர்ந்தவர்களை நாடு திரும்புமாறு அண்மையில் ஊடக அமைச்சர் கோரியுள்ளதாகவும், அவர்களைக் கைது செய்யவா இவ்வாறு அழைக்கின்றார்கள் எனவும் ஜாகொட கேள்வி எழுப்பி யுள்ளார்.

அரசாங்கம் நல்லாட்சி கொள்கைகள் கோட்பாடுகளை அமுல் படுத்தவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஆபத்தான நிலையில் அக்கராயன் மதகு

## புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை



(கிளிநொச்சி)


கிளிநொச்சி அக்கராயன் மருத்துவ மனையிலிருந்து அம்பலப் பெருமாள் சந்திக்குச் செல்லும் வீதியிலுள்ள மதகு ஒன்று ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

கடந்த ஐந்தாண்டுகளாக உடைந்தநிலையில் காணப்படும் இம்மதகு புனரமைக்கப்படாதன் காரணமாக போக்குவரத்துச் செய்யும் மக்கள் பல இடர்களை எதிர்கொண்டுள்ளதுடன் இரவுவேள்ளையில் பயணிக்கும் பயணிகள் இப்பகுதியில் வீழ்ந்து காயங்களுக்குள்ளாகும் சம்பவங்களும் காணப்படுகின்றன.

எனவே இம்மதகினைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன், அக்கராயன் மருத்துவ மனையிலிருந்து ஆரோக்கியபுரம், ஆனைவிழுந்தான்குளம், வன்னேரிக்குளம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு வரையான 20 கிலோமீற்றர் வீதி புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றது. புதுமுறிப்பிலிருந்து கோணாவில், ஸ்கந்தபுரம், அக்கராயன் வரையான வீதியும் புனரமைக்கப்படவில்லை. இதன் காரணமாகவே இவ்வீதிகளில் காணப்படுகின்ற பாலங்கள், மதகுகள் சேதமடைந்த நிலைமையில் காணப்படுகின்றன.

மேலும் கிளிநொச்சி மேற்கிலுள்ள 4000 இற்கு மேற்பட்ட குடும்பங்களின் போக்குவரத்துப் பாதைகள் மீள்குடியேற்றம் நடைபெற்று ஐந்தாண்டுகள் ஆகியும் புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன. (160)

# மகாஜனக்கல்லூரியில் "கண்ணிமை" குறும்படம்



(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில் அண்மையில் "கண்ணிமை" குறும்படம் காண்பிக்கப்பட்டது. இடைநிலை, உயர்நிலை வகுப்பு மாணவர்கள் 1300 பேர் இப்படத்தினைப்பார்த்து தமது கருத்துக் களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தினர்.

படம் தொடர்பான கலந்துரையாடலினை வடமாகாண கல்வித் திணைக்களத்தின் உளவள முகாமையாளர் செல்வி உதயகலா நெறிப்படுத்தியிருந்தார்.

மேலும் 500 ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கும் இப்படம் காண்பிக்கப்பட்டதுடன் படத்தில் நடித்த மாணவமாணவியர் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

மேலும் இப்படத்தின் இயக்கம் நா.கு.மகிழ்ச்சிகரன், கமெரா எடிட்டிங் - சிவராஜ், இசை - மதீசன் தயாரிப்பு - வடமாகாண கல்வித் திணைக்கள உளவளநிலையம். இப்படம் 2014 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி உலக உளநலநாளின்போது வெளியீடுசெய்யப்பட்டது.

இவ் விழிப்புணர்வுக் குறும்படம் தற்போது சகலபாடசாலைகள் தோறும் காண்பிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (48)

# உள்ளூராட்சிசபை தேர்தலில் வாக்களிக்க முல்லைத்தீவில் 53,330 பேர் தகுதி

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவின் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு ஆகியவற்றின் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் 53,330 பேர் வாக்களிக்கத் தகுதிப்பெற்றுள்ளதாக முல்லைத்தீவு அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ள இரு உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கரைதுறைப்பற்றுக்கான ஆசனங்கள் 12, புதுக்குடியிருப்புக்கான ஆசனங்கள் 09, கரைதுறைப்பற்றில் 29,779 பேரும், புதுக்குடியிருப்பில் 23,551 பேரும வாக்களிக்கத் தகுதிப்பெற்றுள்ளனர். கரைதுறைப்பற்றில் 50 வாக்களிப்பு நிலையங்களும், புதுக்குடியிருப்பில் 45 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறுமென தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (160)



கொக்குவில் வராகி முன்பள்ளி பாடசாலைக்கு தளபாடங்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இந் நிகழ்வில் வடமாகாணசபை எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா, நல்லூர் பிரதேசசபையின் எதிர்க் கட்சித்தலைவர் அம்பலம் இரவீந்திரதாசன், மற்றும் சனசமூகநிலைய உத்தியோகத்தர் திருமதி மலர், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# களவு எடுக்க முயன்ற சிறுவன் வசமாக மாட்டினான்

(கரணவாய்)

பருத்தித்துறை. மந்திகைப் பகுதியில் உள்ள வியாபார நிலையமொன்றில் களவு எடுக்க முயன்ற சிறுவன் ஒருவன் வசமாக மாட்டிக்கொண்டான்.

நேற்றுமுன்தினம் மதியநேரம் குறித்த வியாபார நிலையத்தின் கூரையைக் கழற்றி கடைக்குள் இறங்கி பொருட்களைத் திருடிக் கொண்டிருந்த சமயம் கடை உரிமையாளரால் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைக்கப் பட்டுள்ளான்.

கடை உரிமையாளர் சாப்பாட்டுக்காக சென்ற சமயமே இந்த களவு முயற்சி இடம்பெற்றுள்ளதாகவும் முன்னரும் பல தடவைகள் களவு நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குறித்த சிறுவனிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (18)

## முரசின் இன்றைய பலன்

(07.02.2015 சனிக்கிழமை)

ஜய வருஷம் தை மாதம் 24 ஆம் திகதி.
திருதியைத் திதி / மரண யோகம்.
முழுநாளும் உத்தர நட்சத்திரம்.
இராகு காலம 09.35 - 11.05வரை. சுபநேரம 03.35 - 05.05 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
வியாழ சுகக் குறைவினால் பங்குத்தொழில் சேர விரும்பாமை.

**ரிஷபம்**
வாய்ச் சொல் மூலம் கொடுத்த கடனைப்பெறமுடியாது தத்தளித்தல்.

**மிதுனம்**
பெற்றோரின் தேகநலம் மேம்படுவதினால் மகிழ்ச்சியுறல்.

**கடகம்**
பயணத்தினால் அலைச்சல் ஏற்பட்டு தேகநலம் பாதிக்கப்படும்.

**சிம்மம்**
பணவரவில் இடையூறும் தடைதாமதமும் ஏற்படும்.

**கன்னி**
பங்குத் தொழிலைக் கைவிட்டுத் தனித்தியங்க எண்ணமிடல்.

**துலாம்**
தொழில் மற்றும் வியாபாரத்தில் காணப்பட்ட பிரச்சினைகள் விலகிவிடும்.

**விருச்சிகம்**
சுபகாரியங்களுக்கான பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஈடுபடல்.

**தனுசு**
குடும்பத்தேவையைப் பூர்த்தி செய்ய கடன்படும் நிலை உருவாதல்.

**மகரம்**
பணவிடயத்தில் சரியாகக் கணக்கிட்டுப் பெறுவதை கருத்தில் கொள்ளுங்கள்.

**கும்பம்**
பழைய பிரச்சினை முளைவிடுவதினால் சச்சரவினைத் தவிர்க்கவும்.

**மீனம்**
உற்றார் உறவினர்களை அனுசரித்துச் செல்வது நன்மை பயக்கும்.

# அரையிறுதியில் இந்திய அணி நம்பிக்கை கொள்ளும் கங்குலி



(புதுடில்லி)

உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில இந்திய அணி அரை இறுதிக்கு தகுதிபெறும் என்று நான் கருதுகிறேன். டோனி யையும், அவரது தலைமையையும் இந்திய அணி அதிகமாக நம்பி உள்ளது. அவரை வைத்து தான் அணியின் நிலைமை இருக்கிறது.

டோனி சிறப்பாக ஆடுவது மிகவும் முக்கியமானதாகும் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி கூறியுள்ளார்

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக டெஸ்ட் தொடரிலும், 3 நாடுகள் போட்டியிலும் ஏற்பட்ட தோல்வியால் உலக கோப்பையில் இந்திய அணியின் கதை முடிந்து விட்டதாக நினைக்க வேண்டாம்.

இந்த தோல்வியை வைத்து இந்திய அணியை மதிப்பிட்டுவிட இயலாது. இதை தவறு என்பதை இனிவரும் நாட்களில் இந்திய வீரர்கள் நிரூபிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஆட்டத்தின் தன்மையைப் பொறுத்தே துடுப்பாட்ட வரிசை இருக்க வேண்டும்.

இந்திய அணியின் பந்து வீச்சு மிகப்பெரிய கவலை அளிக்கிறது. வேகப்பந்து வீரர்கள் மிகவும் நேர்த்தியாக பந்துவீச வேண்டும்.

உலக கோப்பையில் இந்திய அணி பாகிஸ்தானிடம் தோற்றது இல்லை. இந்த உலக கோப்பையிலும் அதேநிலைமை நீடிக்கும். இந்திய அணி வெற்றியுடன் தொடங்கும் பட்சத்தில் நெருக்கடி குறைந்துவிடும்.

இந்திய அணியோடு அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து ஆகியவை அரை இறுதிக்கு தகுதி பெறும் என்று எதிர்பார்க்கிறேன் எனக் கூறியுள்ளார்.

# மரதனில் பங்கேற்ற மாணவன் மயங்கி வீழ்ந்து மரணம்



அமபலாந்தோட்டையில் நேற்று நடந்த மரதன் ஓட்டப் போட்டியில பங்கேற்ற மாணவன் மயங்கி வீழ்ந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார். அம்பலாந் தோட்டை பொலன மகா வித்தியாலத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமாக மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் பங்கேற்ற பாடசாலையின் 10 ஆம் ஆண்டில் கல்வி பயின்ற, 15 வயதான சமோத் சத்சர என்ற மாணவனே சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவர் ஓடிக்கொண்டிருந்தபோது மயங்கி வீழ்ந்த நிலையில் உடனடியாக அம்பலாந்தோட்டை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தடை நீக்கம்



பிரக்யான் ஓஜாவின் பந்து வீச்சு விதிமுறைக்கு புறம்பாக இருப்பதாக தெரிவித்து, அவருக்கு முதல்தர போட்டியில் பந்து வீச இந்திய கிரிக்கெட் சபை அண்மையில் தடை விதித்தது.

இந்த நிலையில், மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அவரது பந்துவீச்சுப் பாணியில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து, அவருககு விதிக்கப்பட்ட தடையை இந்திய கிரிக்கெட் சபை நீக்கியுள்ளது.

# இந்திய பந்து வீச்சிற்கு உதவி வழங்கத் தயார்



உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின்போது இந்திய வேகப்பந்து வீச்சாளர்களுக்கு ஆலோசனை வழங்கி உதவத் தயாராக இருப்பதாக அவுஸ்ரேலிய முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியிருப்பது:

இந்திய வேகப்பந்து வீச்சாளர்களுக்கு பந்து வீச்சு நுட்பங்களை கற்றுக் கொடுக்க நான் தயாராகவே இருக்கிறேன்.

அதேநேரத்தில் இப்பணியை என்னால் முழு நேரமாக ஏற்க முடியாது. எனெனில் உலகம் முழுவதும் உள்ள வேகப் பந்து வீச்சாளருக்கு உதவ வேண்டும் என்பதே எனது நோக்கம் என்றார்.

# துடுப்பு மட்டையின் அளவு வலுக்கிறது எதிர்ப்பு



சர்வதேச கிரிக்கெட் போட்டியில் வீரர்கள் பயன்படுத்தும் துடுப்பு மட்டை தொடர்பாக புதிய விதிமுறைகளை வகுக்கும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) முடிவுக்கு மேற்கிந்தியத்தீவுகள் அதிரடி துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெயில் உள்ளிட்ட பல வீரர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவுஸரேலியாவில் இருந்து வெளியாகும் சிட்னி மோர்னிங் ஹெரால்ட் பத்திரிகையில் 'பெரிய வீரர்களுக்கு பெரிய துடுப்பு தேவை' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார் கெயல் அதில் அவர் கூறியிருப்பது,

கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்களின் விளையாட்டாக மாறிவிட்டதாகக் கூறுகிறார்கள். அதேநேரத்தில் பந்து வீச்சாளர்கள் மிகவும் திறமைசாலிகளாக வளர்ந்து விட்டனர் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

எனவே கிரிக்கெட் மட்டையின் அளவை வரையறை செய்யும் ஐசிசியின் யோசனையில் எனக்கு உடன்பாடு இல்லை என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவுஸரேலிய முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ கூறுகையில், கெயில், அவுஸ்ரேலிய தொடக்க வீரர் டேவிட் வோர்னர் ஆகியோர் 44 மில்லிமீற்றர் தடிமன் கொண்ட மட்டையைப் பயன்படுத்துவதில் தவறில்லை. ஏனெனில் அவர்கள் அந்த மட்டையைப் பயன்படுத்தும் உடல் வலுவை உடையவர்கள் என்று தெரிவித்தார்.

முன்னாள் அவுஸ்ரேலிய துடுப்பாட்ட வீரா மைக்கல் பெவன், ஐசிசியின் கருத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

# தென்னாபிரிக்காவின் ஆலோசகராக ஹஸி



உலகக்கோப்பை போட்டிகளில் தென்னாபிரிக்க அணியின் ஆலோசகராக மைக் ஹஸி செயறபடவுள்ளார்.

1992 ஆம் ஆண்டு முதல் உலகக்கோப்பை வாய்ப்புகளை பல்வேறு விதங்களில் தவறவிட்ட தென்னாபிரிக்க அணிக்கு 6 வாரங்கள் மைக் ஹஸி உதவவுள்ளார்.

ஹஸியின் மேலாளர் இந்தத் தகவலை அவுஸ்ரேலிய கிரிக்கெட் ஊடகம் ஒன்றில் உறுதி செய்துள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் பயிற்சிகளில் மைக் ஹஸி ஆலோசனைகளை வழங்குகிறார்.

மேலும் அவுஸ்ரேலிய பிட்ச்களில் எப்படி விளையாடுவது என்பது பற்றியும் நுணுக்கங்களை பகிர்ந்து கொள்ளவுள்ளார்.

நாங்கள் மைக்ஹஸியுடன் கலந்தாலோசனை செய்தோம், அதன்படி அவர் ஆலோசகராக ஒர ஒப்புக் கொண்டார் என்று தென்னாபிரிக்க பயிற்சியாளர் ரஸல் டோமிங்கோ தெரிவித்தார்.


# உலக கிண்ணத்தை வென்றால் 6 கோடி ஊக்கத் தொகை

உலகக்கிண்ணத்தை இலங்கை அணி வென்றால் ரூ.6 கோடி ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என்று இலங்கை அரசு அதிரடியாக அறிவித்துள்ளது.

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி வருகிற 14 ஆம் திகதி அவுஸ்ரேலியா, நியூசிலாந்தில் தொடங்குகிறது. மார்ச் 29 ஆம் திகதி வரை இந்தப்போட்டி நடை பெறுகிறது. இந்தப் போட்டியில் சிறப்பாக செயற்பட்டு வரலாறு படைக்க அனைத்து அணிகளும் தயாராகி வருகின்றன.

இந்நிலையில் உலகக்கிண்ணத்தை இலங்கை அணி வென்று விட்டால் 130 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிசாக வழங்கப்படும் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

# பதில் வீரர் இணைப்பு



(கராச்சி)

உலக கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் இடம் பிடித்து இருந்த வேகப்பந்து வீச்சாளர் ஜுனைத்கான் கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக சில நாட்களுக்கு முன்பு அணியில் இருந்து விலகினார். அவ்ருக்கு பதிலாக 26 வயதான இடக்கை வேகப்பந்துவீச்சாளர் ரஹத் அலி சேர்க்கப்பட்டுள்ளார்.



## வல்வை ரெயின்போ சம்பியன்


(வல்வை)

வல்வை பிரதேசத்திற்குட்பட்ட மென் பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை வல்வை ரெயின்போ அணி கைப்பற்றிக் கொண்டது.

வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்திய இப்போட்டித் தொடர் 21 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்டது. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு தீருவில் பொதுப்பூங்கா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

வல்லைப் பிரதேசத்திற்குட்பட்ட பல அணிகள் பங்குகொண்ட இப்போட்த் தொடரின் இறுதி ஆட்டத்தில் வல்வை சைனிங்ஸ் மற்றும் வல்வை ரெயின்போ அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சைனிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் 79 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 80 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வல்வை ரெயின்போ அணி 4.4 ஓவர்கள் நிறைவில் வெற்றியிலக்கை அடைந்தது.



தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடாத்தப்பட்ட வீதியோட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்தோர் அதிபர், விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ஆகியோருடன் நிற்பதைக் காணலாம். (93)

## கரைச்சிப் பிரதேச பெருவிளையாட்டு இன்று ஆரம்பம்

(கிளிநொச்சி)

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டி இன்றைய தினம் இரு மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இதில் பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட், எல்லே, கால்பந்து மற்றும் கபடிப் போட்டிகள் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய மைதானத்திலும், ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி கிளிநொச்சியில் அமைந்துள்ள இளைஞர் சேவை மன்ற மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் எஸ். குமார் தெரிவித்துள்ளர். (93)

## இன்றைய இல்ல மெய்வல்லுநர்

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ். சிவநேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் பிரமத விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிரேமவதி செல்வின், வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன், கௌரவ விருந்தினராக சாரதா தேவி பேராயிரவர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (63)

◆❑❑◆

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எம். மணிசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவர் வைத்திய நிபுணர் திருமதி தேவாநாதன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு. சண்முககுலகுமாரன், கௌரவ விருந்தினர்ாக மகாஜனக் கல்லூரியின் ஓய்வுநிலை உப அதிபர் திருமதி எஸ். தெய்வீகசௌந்தரராணி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (93)

## விக்ரம் - இராஜன் - கங்கு இறுதிப் போட்டி இன்று

(கொக்குவில்)

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடாத்தும் விக்ரம் - இராஜன் - கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்றையதினம் இடம்பெறவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ள இப்போட்டியில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதவுள்ளது.

40 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் மோதவுள்ள இரு அணிகளுமே பலம் வாய்ந்தவை என்பதால் இப்போட்டி இறுதி வரை விறுவிறுப்பிற்கு பஞ்சமிருக்காது என போட்டி அமைப்பாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்தப் போட்டி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகுப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். சபானந் கலந்து கொள்ளவுள்ளார்.

## சர்வதேச ஒலிம்பிக் செயலமர்வில் யாழ். பல்கலை வீரர்



55ஆவது சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் செயலமர்வில் கலந்து கொள்வதற்கு யாழ். பல்கலைக்கழக வணிகபீட மாணவன் அன்ரனிஸ் தேர்வாகியுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீட மாணவனஎம். அன்ரனிஸ் சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தினால் கிறீஸில் ஒலிம்பிக் சதுக்கத்தில் எதிர்வரும் மே 23ஆம் திகதி தொடக்கம் யூன் 6ஆம் திகதி வரை இடம்பெறும் 55ஆவது செயலமர்வில் கலந்துகொள்வதற்காக இலங்கை ஒலிம்பிக் சங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை ஒலிம்பிக் சங்கத்தினால் பண்டாரவளையில் நடாத்தப்பட்ட செயலமர்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சார்பில் பங்குபற்றி சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தியதன் மூலம் சர்வதேச செயலமர்விற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பூப்பந்தாட்ட அணியின் தலைவரும், கரம் அணியின் அங்கத்தவரும், 2014ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணப்பல்கலைக்கழக சகலதுறை விளையாட்டு வீரருக்குரிய சிறப்பு விருதையும் பெற்றுக்கொண்டவராவார்.

## இறுதிக்கு முன்னேறியது ஊரெழு றோயல்

விளையாட்டுச் செய்திகள்



(உரும்பிராய்)

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கால்பந்துத் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு ஊரெழு றோயல் அணி முன்னேறியுள்ளது.

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம் நடாத்திவரும் அணிக்கு ஏழு பேர் கொண்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் குருநகர் பாடுமீன் அணியும் ஊரெழு றோயல் அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இரு அணிகளுக்கும் கிடைத்த வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்தி கோலையும் பெற்றுக்கொண்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டி நிறைவில் இரு அணிகளும் 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தன. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் சிறப்பான முறையில் செயற்பட்ட ஊரெழு றோயல் அணி 6-5 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் நவிண்டில் கலைமதி அணியை வீழ்த்தி நாவாந்துறை சென். மேரிஸ் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டி நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)



பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடாத்தப்பட்ட வீதியோட்ட நிகழ்வில் வீரர்கள் முதலிடத்தைப் பிடிக்க ஓடிவருவதைக் காணலாம். இப்போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (90)

# கிழக்கில் தீராப் பிரச்சினையாக தொடரும் முதலமைச்சர் விவகாரம்

- சாலையூரான்

கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் பதவி தமக்கு வேண்டுமென்கிற தமிழ் கூட்டமைப்பின் கோரிக்கை இதுவரை தமிழ் முஸ்லிம் அரசியல் தலைமைகளிடையே இருந்து வந்த உறவில் இப்போது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு விவகாரமாக மாறியிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தமிழ் கூட்டமைப்பின் யாழ்ப்பாணத் தலைமையை பொறுத்தவரை கிழக்கின் தலைமைத்துவத்தை அடைந்து கொள்வதற்கான இந்த முயற்சி அவ்வளவுக்கு அக்கறைக்குரியதாக இருக்கவில்லை.

இதற்காக முஸ்லிம் தரப்புக்களுடன் நடைபெற்ற பேச்சுக்களில் இந்த விடயத்தை தேர்தலின் பின்பு பார்த்துக் கொள்ளலாம் என்பதாக சம்பந்தன் கூறியிருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை தோற்கடிக்க வேண்டும் என்பதே தமிழ் கூட்டமைப்புக்கு பிரதான அக்கறைக்குரிய விடயமாக இருந்த நிலையில் அடுத்து வரும் அரசாங்கத்தில் யார் முதலமைச்சராக இருக்கவேண்டும் என்பது பற்றிய அக்கறை தமிழ் கூட்டமைப்பினரால் அவ்வளவுக்கு கவனத்தில் கொள்ளப்படவில்லை.

கிழக்கு முஸ்லிம்களின் ஆகக் கூடுதலான வாக்குகள் ஜனாதிபதி மைத்திரிபாலவின் வெற்றிக்கு பங்களிக்கும் என்பதையும் அதன்வழி மத்தியில் காத்திரமான அமைச்சுப் பொறுப்புக்களுடன் கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் விவகாரத்தில் இந்த முஸ்லிம் தலைவர்கள் மேலாண்மை செலுத்துவார்கள் என்பதையும் தமிழரசுக்கட்சி தலைமை



எதிர்பார்த்திருக்கவில்லை.

இதனைவிட கிழக்கின் தமிழ் தேசிய தலைமைகளுக்கு இந்த முதலமைச்சுப்பதவியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டு இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்பதையும் இது தம்முன் ஒரு கோரிக்கையாக வந்து நிற்கும் என்பதையும் வடக்கின் தமிழ் தேசிய தலைமைகள் எதிர்பார்த்திருக்கவிலலை என்றே கூற வேண்டும்.

தேர்தலுக்கு முன்னர் முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காஙகிரஸ், பொதுஜன முன்னணி என்பன இணைந்து கிழக்கின் மாகாண சபையில் ஆட்சியை அமைத்திருந்த நிலையில் தேர்தலுக்கு பிறகு கிழக்கின் தமிழ் தரப்பு முதலமைச்சர் பதவிக்காக பேரம் பேசும் ஒரு சக்தியாக மாறும் என்பதையும் வடக்கின் தமிழ் தலைவர்கள் கணிப்பிட தவறியிருந்தனர்.

இவ்வளவு காலமும் வடக்கின் தமிழ் தேசிய தலைமைகளின் நலன்களிலிருந்து முஸ்லிம்களுடனான உறவை பேணிவந்த நிலைமை மாறி இப்போது கிழக்கு தமிழர்களுக்காக அங்குள்ள முஸ்லிம் தலைமைகளுடன் பேரம்பேசி முரண்படும் ஒரு நிலைமைக்கு தமிழரசுக்கட்சி தள்ளப்பட்டிருப்பது அதன் தலைவர்களை பொறுத்தவரை அவர்கள் எதிர்பார்த்திராத ஒரு பிரச்சினையாகும்.

பிந்தியதாக முஸ்லிம் தலைவர்களின் முதலமைச்சர் பதவிக்கான வலியுறுத்தல்கள் எதிர்காலத்தில் இனமுறுகல்கள் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் உருவாக காரணமாகலாம் என்றொரு கருத்தும் கிழக்கின் தமிழ் அரசியல் ஆர்வலர்கள் மத்தியில் வலுப் பெற்றிருகிறது.

கிழக்கு தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்த விரும்பும் தமிழ் கூட்டமைப்பின் அரியநேந்திரன் எம்.பி மற்றும் முன்னாள் எம்.பி வினோதராதலிங்கம் ஆகியோர் முதலமைச்சர் பதவி தமிழர்களுக்கே கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக நிற்கிறார்கள்.

இவர்களின் கோரிக்கையை நிறைவு செய்யாவிட்டால் எதிர்காலத்தில் கிழக்கின் தமிழ் தேசியத்தலைமை தனிவழி சென்றுவிடுமோ என எண்ணுமளவிற்கு இந்த முதலமைச்சர் விவகாரம் வடக்கின் தமிழ் அரசியல் தலைமைகள் மத்தியில் பிரதான பேசுபொருளாகி இருக்கிறது.

தமது வாக்கு வங்கியை தக்கவைப்பதற்கு வசதியாக அரசுடன் எதிர் நிலைப்பாட்டை மேற்கொண்டதில்

---

# கே.வி. மகாதேவன்

## 54

- பி.ஜி.எஸ்.மணியன் -



"ஏமாற்றாதே ஏமாற்றாதே" - வழக்கத்துக்கு மாறாக ஏராளமான இசைக் கருவிகளை உபயோகப் படுத்தியிருக்கிறார் கே.வி. மகாதேவன். ட்ரம்பெட்டும், வயலின்களும் சரணங்களின் இணைப்பிசையில் விறுவிறுப்பாக் கையாளப்பட்டிருக்கும் திறமை வாயடைக்க வைக்கிறது.

"இந்தப் பாட்டிற்கேற்ப ஜெயலலிதா தன் உடலிலேயே சிறு முரசுகளைக் கட்டியபடி புதுமையாக ஆடியிருக்கிறார்.

டி.எம்.எஸ். குரல் வளமும், வாலியின் கருத்தாழமிக்க வரிகளும், மகாதேவனின் இசையும், சோப்ரா மாஸ்டரின் நடன அமைப்பும் பாடல் காட்சியை பெருவெற்றி பெறவைத்திருக்கின்றது.

அடுத்து புலவர் புலமைப் பித்தனின் முதல் பாடல். (வீரத்திலே கவி எழுதி பாடல் படத்தில் இடம் பெறாமல் போனதால் அவரது முதல் பாடல் என்ற பெருமை இந்தப் பாடலுக்குத்தான்.) இன்றளவும் அடிமைப் பெண் என்ற பெயர் சொன்னாலே போதும் உதடுகள் உச்சரிக்கும் பாடலாக அமைந்து விட்ட "ஆயிரம் நிலவே வா" எஸ்.பி. பாலசுப்ரமணியத்தின் முதல் பாடல். பி.சுசீலாவுடன் அவர் பாடிய அற்புதமான டூயட். "பீம்ப்ளாஸ்" மனதை அள்ளுகிறது.

"உன்னைப் பார்த்து இந்த உலகம் சிரிக்கிறது" படத்தின் உச்சக் கட்ட காட்சிக்கு முன்னால் வரும் கவிஞர் வாலியின் பாடல். டி.எம்.எஸ். - வாலி- மகாதேவன் மூவரும் எம்.ஜி.ஆர். படத்தில் இணைந்தால் கண்டிப்பாக பாடல் வெற்றிப் பாடலாக அமையும் என்பதை நிரூபித்த பாடல்.

"அடிமைப்பெண்" அனைத்துப் பாடல்களும் மாபெரும் வெற்றி பெற்றன.

அதே ஆண்டில் வெளிவந்த கே.எஸ். கோபாலகிருஷ்ணனின் "சுபதினம்" படத்தில் "ஆண்டுக்கு ஆண்டு தேதிக்கு தேதி ஆயிரம் இருக்குது சுபதினம்" என்ற சீர்காழி கோவிந்தராஜன் பாடிய வாலியின் பாடல் குறிப்பிடப்படவேண்டிய ஒன்று.

இதே படத்தில் இடம் பெற்ற "புத்தம் புதுமேனி" என்ற பாலமுரளிகிருஷ்ணா - பி.சுசீலாவின் டூயட் பாடல் இனிமையாக அமைந்தாலும் கே.வி. மகாதேவனுக்கு ஒரு கரும்புள்ளியை ஏற்படுத்திய பாடல். இந்தப் பாடலுக்கான மெட்டு அவரது நண்பராக இருந்த இசையமைப்பாளர் டி.ஜி. லிங்கப்பா அவர்களுடைய மெட்டு. தெரிந்து நடந்ததா தெரியாமல் நடந்ததா என்பது வேறு விஷயம். ஆனால் மாமேதையான மகாதேவனுக்கு ஒரு சிறு களங்கத்தை ஏற்படுத்திய நிகழ்வு.

ஜெய்சங்கர் - கே.ஆர்.விஜயா நடித்த பி. மாதவன் இயக்கிய படம் "பெண்ணே நீ வாழ்க" - பஹாடியில் ஒரு அருமையான இருகுரலிசை பாடல். "பொல்லாத புன்சிரிப்பு போதும் போதும் உன்சிரிப்பு" என்ற வாலியின் பாடலை டி.எம்.எஸ். - சுசீலா பாடினார்கள். நினைவில் நிற்கும் பாடல் இது ஒன்றுதான்.

"காதல் வாகனம்" - படத்தின் தோல்விக்குப் பிறகு தமிழ் நாட்டிலுள்ள முருகன் தலங்கள் அனைத்தையும் படத்தில் காட்டி தனது முதல் பக்திப் படத்தைத் தயாரிக்க ஆரம்பித்தார் சின்னப்பா தேவர்.

பாடல்கள் - கண்ணதாசன், மருதகாசி. இசை - வழக்கம் போல கே.வி. மகாதேவன்.

சேவற்கொடியோனின் பெருமைக்கு ஒரு வெற்றிக்கொடி நாட்ட வந்தான்.....

தேவரின் "துணைவன்"..

ஏ.வி.எம். ராஜன் - சௌகார் ஜானகி இருவருடன் திருப்புமுனையான ஒரு கதாபாத்திரத்தில் திருமுருக கிருபானந்த வாரியாரையும் நடிக்க வைத்தார் சின்னப்பா தேவர்.




முருக பக்தையான கே.பி. சுந்தராம்பாளை பாட வைத்தார். டி.எம்.சௌந்தரராஜன் - பி. சுசீலாவும் இருந்தார்கள்.

பொதுவாக புராணக் கதைகளுக்கு இசை அமைப்பது என்பது வேறு. சமூகக் கதையோடு பின்னப்பட்ட பக்திக் கதைக்கு இசை அமைப்பது வேறு.

புராணப் படங்களில் இடம் பெறும் பாடல்களுக்கு தெய்வீக மணம் கமழ இசை அமைத்தால் போதும். காட்சி அமைப்பே பாடலை வெற்றிபெறச் செய்துவிடும்.

ஆனால் "துணைவன்" போன்று ஆன்மிகம் கலந்த குடும்பக் கதைக்கு கேட்பவரின் உள்ளத்தைத் தொடும் வண்ணம் இசை அமைந்தால் தான் பாடல்கள் வெற்றி பெறும்.

துணைவன் பாடல்கள் கேட்பவரின் உள்ளத்தைத் தொட்டன.

அசைவே இல்லாத ஒரு குழந்தை பிறக்க அதனை மீட்க கணவனும் மனைவியுமாக குமரக்கடவுள் கோவில் கொண்டிருக்கும் தலங்கள் அனைத்துக்கும் குழந்தையைத் தூக்கிக் கொண்டு செல்கின்றனர்.

"மருதமலை மீதிலே குடிகொண்டிருப்பவனே" என்று விருத்தமாகத் துவங்கும் பாடலில் டி.எம்.எஸ். - பி.சுசீலா நாதோபாசனை செய்திருக்கிறார்கள்.

பெரிய பாடல். நிறைய சின்னச் சின்ன சரணங்கள். ஒவ்வொரு சரணத்துக்கும் ராகம் மாறும் பாடல். சரணங்களுக்கு இடையே வரும் இணைப்பிசையாக ஆலய மணியின் ரீங்காரத்தை மட்டுமே பயன்படுத்தி அற்புதமாக பாடலை அமைத்திருக்கிறார் கே.வி. மகாதேவன். உருக்கம் துல்லியமாக வெளிப்படும் வண்ணம் உணர்ச்சி பூர்வமான பாடல்.

கண்ணதாசனும், மருதகாசியும் இணைந்து இந்தப் பாடலை எழுதி இருக்கிறார்கள்.

பாடலின் முடிவில் "திருப்பரங்குன்றத்து நாயகனே" என்ற வரிகளுக்கு சுசீலா கொடுக்கும் அழுத்தம்.. குறை தீர்த்துவைப்பாய் வடிவேலவனே" என்று முடிக்கும் போது "வேலவனே" என்ற வரிகளை உச்சத்தில் அமைத்து இருவரின் குரல்களையும் சிகரத்தில் ஏற்றிப் பாடலை முடிக்கிறார் கே.வி.மகாதேவன்.

அதன் பிறகு முருகனடிமை கே.பி. சுந்தராம்பாள் ராஜ்ஜியம் தொடங்குகிறது.

"பழனி மலை மீதிலே குழந்தை வடிவாகவே" என்ற விருத்தத்துடன் தொடங்கி "ஜெயமுண்டு பயமில்லை வேல் வேல்" என்று ஷண்முகப்பிரியாவில் அவர் பாடும் பாடலும்.

உச்சகட்டத்தில் "கூப்பிட்ட குரலுக்கு யார் வந்தது" என்ற பாடலும் அதைத் தொடரும் "அன்று நீ வேலூன்றி நீரெடுத்த" விருத்தமும் படத்தின் முடிவில் அவர் பாடும் "குன்றாடும் திருச்செந்தூர்க் குமரா குகா ஷண்முகா" என்ற விருத்தமும் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்ட பாடல்கள்.

"துணைவன்" படத்தில் கே.பி. சுந்தராம்பாளின் பாடல்கள் அவருக்கு அந்த வருடத்தின் மிகச் சிறந்த பாடகிக்கான தேசிய விருதைப் பெற்றுத் தந்தன.

பக்திப் படங்களில் தேவர் தொடங்கி வைத்த இந்தப் புதிய பாணிக்குப் பிறகு சமூகப் பின்னணியில் புற்றீசல்களாக பல படங்களை வெளிவரவைத்து இன்று அம்மன் கையில் வேப்பிலையை சுமந்து கொண்டு குத்தாட்டம் போடும் அளவுக்கு வந்து நிற்கிறது.

(தொடரும்)

இதுவரை வடக்கு மாகாண சபை மூலம் தமிழ் மக்களுக்காக எதையும் சாதிக்க முடியாது தமிழ்க் கூட்டமைப்பினர் இருந்து வருவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருப்பது அனைவரும் அறிந்த ஒன்று.

தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கத்தில் தமக்கான அமைச்சுப் பொறுப்புக்களை நிராகரித்திருக்கும் தமிழ்க் கூட்டமைப்பினர் கிழக்கின் முதலமைச்சர் பதவி மூலம் எதனை சாதிக்க முயற்சிக்கிறார்கள் என்பது பலரதும் கவனத்துக்குரிய ஒரு விடயமாக இப்போது ஆகியிருக்கிறது.

முஸ்லிம்கள் பதவிக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காகவே இவர்கள் முதலமைச்சர் பதவியை எடுத்துக்கொள்ள விரும்புகிறார்களா, என்றொரு கேள்வியும் கிழக்கு முஸ்லிம் தரப்பினர் மத்தியில் இப்போது வலுவாக எழுந்திருக்கிறது.

முதலமைச்சர் பதவியை பெற்றுக் கொடுத்து தமது சக தலைவர்களை திருப்திப்படுத்துவார்களா அன்றி முஸ்லிம் தலைமைக்கு வழிவிட்டு ஒரு விட்டுக்கொடுப்பு அரசியலுக்கு தமிழ்க் கூட்டமைப்பு துணியுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# மான்புக்கர் பரிசு!



இந்த ஆண்டு மான்புக்கர் பரிசு அவுஸ்திரேலிய எழுத்தாளர் ரிச்சர்ட் ஃபிளானகன் எழுதிய "The Narrow Road in the Deep North" என்ற நாவலுக்குக் கிடைத்துள்ளது. அவுஸ்திரேலியனாக இருப்பதற்கு நான் வெட்கப்படுகிறேன். காரணம் "அவுஸ்திரேலியாவின் சுற்றுச்சூழல்" கொள்கைதான் என்றிருக்கிறார் ஏற்புரையில் ரிச்சர்ட் ஃபிளானகன்.

மான்புக்கர் பரிசு பற்றி ஒரு சிறு குறிப்பு.

1969 இல் 5 ஆயிரம் பவுண்ஸாக இருந்த பரிசுத்தொகை, இப்போது 50 ஆயிரம் பவுண்ஸாக உயர்ந்துள்ளது.

2013 இல் நியூசிலாந்தைச் சேர்ந்த எழுத்தாளர் எழுதி பரிசு பெற்ற புத்தகத்தின் பக்கங்கள் 832. இதுதான் அதிக பக்கங்களைக் கொண்ட நாவல்.

1979 இல் வெளியாகி பரிசு பெற்ற ஆஃப் ஷோர் என்ற புத்தகத்தின் பக்கங்கள் மிகவும் குறைவு. 132 பக்கங்கள்தான்.

இதுவரை பரிசு பெற்றவர்களில் ஆண் எழுத்தாளர்கள் 31 பேர். பெண் எழுத்தாளர்கள் 14 பேர்.

இந்தியாவின் அருந்ததி ராய், கிரண் தேசாய், அரவிந்த அடிகா ஆகிய மூவரும் மான்புக்கர் பரிசு பெற்றவர்கள்.

# யார் தெரிகிறதா?




இந்தப் புகைப்படத்தில் இருப்பவர்கள் யார் என்று தெரிகிறதா? இவர்கள் இருவரும் அந்தக் காலத்தில், அதாவது சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பிருந்து அமரர்களாகும் வரை அழியாப் புகழைப் பெற்றிருந்தார்கள். நாடகம், திரைப்படம் இவை இரண்டிலும் ஜாம்பவான்களாகத் திகழ்ந்தார்கள்.

70 ஆண்டுகட்கு முன் "ராஜா பர்த்ருஹரி" என்னும் மேடை நாடகத்தில் படைத் தளபதியாக நடித்தவர் டி.கே. ஷண்முகம். அவருக்கு ஆசைக் காதலியாக நடித்தவர் பின்னாளில் திருவிளையாடல், தில்லானா மோகனாம்பாள், ராஜராஜ சோழன் போன்ற படங்களை இயக்கிய ஏ.பி. நாகராஜன்.

ஆம்.. முதலில் பெண் வேடமேற்று மேடைகளில் நிஜமான பெண்ணா என்று ரசிகர்களை வியப்பில் ஆழ்த்திய திருவிளையாடல் நக்கீரனே இவர்.

# மதுடேல்வரன் கவிதை



'உங்கள் திருமணத்தன்று
நான் எங்கிருந்தேன்?'
மகளின் கேள்விக்கு
விடைகூற முயன்றேன்.

'அந்தத் தீயின்
நடுச்சுடராக ஒளிர்ந்திருந்தாய்.


எம் தலைமீது தூவப்பட்ட
அட்சதையில்
ஒரு மணியாக இருந்தாய்.

சூடிய மாலை நறுமணத்தில்
இருந்ததும் நீதான்.

தாத்தா பாட்டியரின்
கண்களில்
நீர்த்துளியாக நீ திரண்டு நின்றாய்.

உன் தாயைக் கரம்பற்றிய
என் உள்ளங்கைக்குள்
வெப்பமாக இருந்ததும்
நீயே...!'

# அகிம்சைப் போராட்டத்தில் இணையும் முற்போக்குகள்(!?)



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

மகிந்த அரசாங்கம் உயர் பாதுகாப்பு வலயங்களிலை சனத்தைக் குடியேற்றேல்லை, இராணுவத்தை வெளியேற்றேல்லை, அரசியல் தீர்வை முன்வைக்கேல்லை எண்டு கூட்டமைப்பு குற்றஞ் சாட்டி மைத்திரி அரசாங்கத்தைத் தெரிவு செய்ய மக்களை ஏவி (ஆணை) விட்டது. அதன்படி மைத்திரி அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டாயிற்று. அதன் உயர் சபையிலை சம்பந்தன் உட்கார்ந்தாச்சுது.

ஆனால் இந்த அரசாங்கத்திலையும் நம்பிக்கை வைக்கேலாதாம். கூட்டமைப்பின் சுரேஸ் மற்றும் மாவையார் சொல்லுகினை.

மைத்திரி அரசாங்கம் தமிழர் பிரச்சினைக்கு ஞாயமான தீர்வைத் தர வேணும் எண்டு கேட்டினை. மக்களை மீளக் குடியேற்ற வேணும் எண்டினை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேணும் எண்டினை. புலம்பெயர் அமைப்புகள், தனி மனிசற்றை தடை நீக்க வேணும் எண்டினை. இராணுவத்தை முற்றாக வடக்கிலையிருந்து நீக்க வேணும் எண்டினை...

இப்பிடியே விக்கிரமாதித்தனைப் பார்த்துக் கேள்வியை மட்டுமே கேட்கிற வேதாளம் போலை யானைப் பசியோடை பல கோரிக்கையளை புதிசு புதிசாய் மைத்திரி அரசாங்கத்துக்குக் கூட்டமைப்பார் விடுத்துக் கொண்டிருக்கினை. மைத்திரியும் அவ்வப்போது மிட்டாய் குடுக்கிற மாதிரி சிலதுகளைக் குடுத்துக் கொண்டுதான் வாறார்.

எல்லாத்துக்கும் மேலாய் டக்ளஸை அரசியல் வனவாசத்துக்குக் கொண்டு போறதிலை அதிகமாய் கவனம் செலுத்தி வருகினை. அது மகேஸ்வரி நிதியம், பல்கலைக் கழகப் பேரவை, அரச அலுவலகத் தலைமைகள், ஊழியர்கள் எண்டு தொடருது. ஒரு அரசியல் பழிவாங்கல் தொடர்ந்து கொண்டிருக்குது. இதுக்கு மைத்திரி அரசாங்கமும் ஆதரவாய் இருந்து வருகுது.

வெளிநாட்டவர்களுக்கான பயணத் தடை நீக்கம், ஓமந்தை சோதனைச் சாவடி கெடுபிடி நீக்கம் எண்டு நல்லெண்ணமாய் சிலவற்றைச் செய்தும் வருகிறது. ஆனால் ஒரு இரவுக்குள்ளை அதிசயம் நிகழ்த்தி விட வேணுமெண்டு கூட்டமைப்பு நினைக்கிறதும், அதுக்காகப் பிலாக்கினம் பாடுறதும் நல்லாயில்லை.

பிரேமதாஸ காலத்திலையும், சந்திரிக்கா காலத்திலையும் பிடிக்கப்பட்ட பொதுமக்களின்ரை கிராமங்களை அமைச்சர் டக்ளஸின் இடையறாத கோரிக்கையளாலை மகிந்த ஜனாதிபதியே விடுவிச்சவர் எண்டதையும், படலைக்குப் படலை கிடந்த ஆமிக் காம்புகளை மூடி ஒரு மூலையிலை இருக்க விட்டவர் எண்டதையும் நாங்கள் வசதியாய் மறந்து போனம். ஒருத்தர் செய்த நன்றியளை மறக்கிறது எங்கடை பிறவிக் குணந்தான்!


சரி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட மைத்திரி அவர்களோ, நிறைவேற்றுச் சபையிலை இருக்கிற சம்பந்தன், மனோ கணேசன் ஆகியோரோ இந்த ஒரு மாதத்துக்குள்ளை இப்பிடியான வேலை எதையும் செய்யேல்லை எண்டது ஒருபுறமிருக்கட்டும். அதைப் படிப்படியாகத்தான் செய்ய வேணும் எண்ட யதார்த்தத்தை உணர்ந்தாலே போதும்.

இப்ப உள்ள பெரிய பிரச்சினை தமிழற்றை உரிமையளைப் பெறுகிறதில்லை. சிங்கள மக்களின்ரை மனங்களை வெல்லுறது. பெரும்பான்மை சிங்கள மக்களின்ரை அபிலாசையளைப் புறந்தள்ளிற அரசாங்கங்கள் கஸ்டப்பட வேணும் எண்டது யதார்த்தம். இல்லாட்டாலும் மகிந்த செய்ததை இப்பத்தை அரசாங்கம் இல்லாமல் செய்யிறது போலை அடுத்து வாற அரசாங்கம் இவை செய்யிறதை இல்லாமல் செய்யும்.

முற்போக்கு சக்தியளோடை இணைஞ்சு அகிம்சைப் போராட்டம் செய்ய "வாய்ச் சொல் வீரர்" மாவையார் பேரிகை கொட்டினார். ஆனால் அதற்கான நெஞ்சுரமும் நேர்மைத் திறனும் இல்லாததாலை அகிம்சைப் போராட்டம் நடக்கவேயில்லை. முற்போக்குச் சக்தியளையும் அவையின்ரை பூதக் கண்ணாடியளுக்குத் தெரியேல்லை.

எனவே ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி., சரத்தின்ரை ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி, றிசாத்தின்ரை மக்கள் காங்கிரஸ், ஹக்கீமின்ரை முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய முற்(?) போக்குக் கட்சியளோடை இணைஞ்சு செயற்படுகினை.

தமிழரை மாறி மாறி வதைச்ச, பல்லாயிரம் மக்களின்ரை அழிவுக்குக் காரணமான, தமிழற்றை உரிமையளை வழங்கத் தயங்குகிற, கிடைக்கிற உரிமையளைத் தட்டிப் பறிக்கிற இந்தக் கூட்டுக்கள் முற்போக்காம்! இப்பவே இதிலை சில கட்சியளாலை மூக்குடைஞ்சு போய் நிக்கினம் எண்டது இவையின்ரை முற்போக்குக்குக் கிடைச்ச அசல் பரிசுகள்தான்!





அதை விடுத்து மைத்திரியை ஆதரிக்கச் 'செய்தவை'யிட்டை முறையிட்டுக் கொண்டிருக்கினை. அவையுந்தான் என்ன செய்யிறது? ஒரு பக்கம் உள்ளுக்கை இருந்து கிடைக்கிற சலுகையளை அனுபவிக்கிறது, மறுபக்கம் வெளியாட்களைத் தலையிடக் கோருகிறது எண்டு வேண்டாப் பெண்டாட்டி நிலையிலை செயற்படுகிற கூட்டமைப்பை என்னதான் செய்யிறது?

விரைவிலை 'பிடிக்காட்டால் டைவர்ஸ் செய்யுங்கோ. எனக்குத் தொல்லை தராதேங்கோ' எண்டு ஆதரிக்க வச்சவை சொன்னாலும் சொல்லுவினை.

# புதிர்ப்போட்டி இல - 26

**01ஆம் வினாவின் ஆரம்பத்தில் தரப்பட்ட உருவத்தில் வெற்றிட பகுதி உள்ளது. படத்தின் எஞ்சிய பகுதிகளைக் கருத்திற் கொண்டு அந்த வெற்றுப்பகுதியை நிரப்ப மிகவும் பொருத்தமான விடையைக் கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**

01) 


**02 தொடக்கம் 04 வரையில் உள்ள ஒவ்வொரு வினாக்களின் கீழேயும் 4 கூற்றுக்கள் படி தரப்பட்டுள்ளன அவற்றில் 3 கூற்றுக்கள் உண்மையாகவும் ஒன்றோடொன்று தொடர்புள்ளதாகவும் அமைவீது தோடு அவற்றுடன் பொருந்தாத / தவறான கூற்றை முன்வைக்கும் தெரிவினை தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**

02)(1) இரு பென்சில்களின் விலை பேனாவொன்றின் விலைக்குச் சமனாகும
(2) இரு பேனாக்களின் விலை மூன்று அழிநபர்களின் விலைக்குச் சமனாகும்
(3) பென்சிலானது அழிறபரை விட விலை குறைவானது
(4) பென்சில் பேனா அழிறபர் என்பவற்றுள் விலை குறைந்தது அழிறபராகும் (.......)

03)(1) ரஜீவன் தம்பதியினருக்கு உள்ள ஒரேயொரு ஆண் பிள்ளை கிருஷ்ணா ஆவார்.
(2) ரஜீவன் தம்பதியினருக்கு உள்ள ஒரேயொரு பெண்பிள்ளை ராதை ஆவார்
(3) ரஜீவன் தம்பதியினருக்க உள்ள ஒரேயோரு பிள்ளை கிருஷ்ணா ஆவார்
(4) ரஜீவன் தம்பதியினருக்கு பெண் பிள்ளையொன்று உள்ளார் (......)

04) (1) நேற்று திங்கட்கிழமையாகும்
(2) நாளை மறுதினம் வெள்ளிக் கிழமையாகும்
(3) நேற்று முன்தினம் திங்கட்கிழமை இல்லை
(4) இன்று வியாழக்கிழமை இல்லை (......)

**05 தொடக்கம் 07 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் ஒரு குறித்த அமைப்புப் பொறிநுட்பத்தை அடிப்படையாய் கொண்டவை. இதனூடாக அனுப்பப்படும் எழுத்துக் கூட்டம் உரிய பாதையில் முன்னோக்கிச் சென்று அமைப்பிற்கு உட்பட்டு வேறோர் எழுத்துக்கூட்டம் வெளியேறுகின்றது. ஒவ்வொரு வினாவிலும் உள்ள எழுத்துக் கூட்டம் இவ்வாறு செல்லும் போது வெளியேறும் எழுத்துக் கூட்டத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**




## அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல: ---------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

05) IJKL → [+] → [△] → [X] → (-----)

06) UVWX → [○] → [X] → [−] → [△] → (-----)

07) RST → [−] → [○] → [+] → [X] → (-----)

**கீழுள்ள வினாவில் நான்கு கூற்றுக்களிடையே மூன்று கூற்றுகள் குறித்துரைத்த உண்மைகளாக இருக்கும் அதேவேளை ஒன்று அபிப்பிராயமாகும். அக்கூற்றைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீத எழுதுக**

08) (1) இடியப்பம் எந்நேரத்திலும் உண்ணத்தக்க உணவாகும்
(2) இடியப்பம் மாப்பொருள் உள்ள உணவாகும்
(3) இடியப்பம் பல ஆசிய நாடுகளில் முக்கிய உணவாகும்
(4) இடியப்பம் இலங்கையின் பிரதான உணவுமாகும் (........)

**09ஆம், 10ஆம் வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் விவரங்களை அடிப்படையாகக் கொண்டவை இந்து ஆரம்ப பாடசாலையின் தரம் 5 இல் A.B.C என்னும் மூன்று சமாந்தர வகுப்புக்கள் உள்ளன. அம்மூன்று வகுப்புக்களிலும் முறையே 35, 40, 45 மாணவர்கள் உள்ளனர். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அவ்வகுப்புக்கள் ஒவ்வொன்றினதும் மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் சராசரி முறையே 100, 120, 128 ஆகும்**

- வகுப்பு A யில் உள்ள மாணவர்கள் பெற்ற உயர்ந்தபட்சப் புள்ளிகள் 112 உம் குறைந்தபட்சப் புள்ளிகள் 88 உம் ஆகும்
- வகுப்பு B யில் உள்ள மாணவர்கள் பெற்ற உயர்ந்தபட்சப் புள்ளிகள் 130உம் குறைந்தபட்சப் புள்ளிகள் 113உம் ஆகும்
- வகுப்பு C யில் உள்ள மாணவர்கள் பெற்ற உயர்ந்தபட்சப் புள்ளிகள் 160உம் குறைந்தபட்சப் புள்ளிகள் 115 உம் ஆகும்

இத்தகவலை நன்றாகப் பரீசீலிக்க ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைக் கீழே தரப்பட்டுளள் நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக

09) வகுப்பு A யிலிருந்து ஐந்து வகுப்பு B யிற்கு மாறினால் வகுப்பு B யின் மாணவர்களின் புள்ளிகள் சராசரிக்க என்ன நடைபெறும்?
(1) கட்டாயம் அதிகரிக்கும்
(2) கட்டாயம் குறையும்
(3) மாறமாட்டாது
(4) நிச்சயமாகக் கூற முடியாது (.......)

10) வகுப்பு A யிலிருந்து ஐந்து மாணவர்கள் வகுப்பு B யிற்கு மாறினால் வகுப்பு A யின் மாணவர்களின் புள்ளிகளின் சராசரிக்கு என்ன நடைபெறும்?
(1) கட்டாயம் அதிகரிக்கும்
(2) கட்டாயம் குறையும்
(3) மாறமாட்டாது
(4) நிச்சயமாகக் கூறமுடியாது (......)

**இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும். அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.**

## சென்றவார விடைகள்

01) 10 + 7 = 17
02) 10 + 5 = 15
03) 24 + 57 = 81
04) 4 + 7 = 11
05) 269 + 189 = 458
06) 2ஆம் விடை $(2,(2+1)^2)$
07) 3ஆம் விடை 10 x 12 = 144 என வரவேண்டும்
08) 1ஆம் விடை (6,6(6 +1))
09) C
B தனியே வேலை செய்யும் மணித்தியாலத்தையும் அதன் இரு மடங்கு வேகத்தையும் கவனத்தில் எடுக்க வேண்டும்
10) E
இவ் இரு கூற்றுக்களில் இருந்தும் யார் கூடிய விருப்புவாக்குகளைப் பெற்றவர் என அறிய முடியாது

11) 4ஆம் விடை
கிழமைகள்
திங்கட்கிழமை
ஆசிரியர்கள்
விமல், அமல்

12) 1ஆம் விடை
கிழமைகள்
செவ்வாய்க்கிழமை
புதன்கிழமை
ஆசிரியர்கள்
கமல்
அமல்

13) 4ஆம் விடை
கிழமைகள்
வியாழக்கிழமை
வெள்ளிக்கிழமை
ஆசிரியர்கள்
கமல்,விமல்,அமல்
விமல், கமல்

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- சி.உதயன்
தரம் :- 10
பாடசாலை:-யா/சத்தியசாயி பாடசாலை

பெயர் :- சி.டிலக்ஷன்
தரம் :- 10
பாடசாலை:-யா/சத்தியசாயி பாடசாலை

பெயர் :- சி.சபிதா
தரம் :- 12
பாடசாலை:-யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

### விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ------------------------
பாடசாலை :- ------------------------
கல்வி கற்கும் தரம் :- ------------------------
வீட்டு முகவரி :- ------------------------
தொ.பேசி இலக்கம் :- ------------------------



கைதடி வடக்கு யுப்பிட்டர் கல்வி நிலைய மாணவர்கள் ஆசிரியர்கள் கல்வி நிலையத்தின் 10 ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி வடக்கிலிருந்து கைதடி தெற்கு வரையில் வீதியின் இரு கரைகளிலும் உள்ள பற்றைகளை வெட்டி சிரமதானம் செய்வதனைக் காணலாம். (90)

# அரசியல் கைதிகளின் பிள்ளைகளுக்கு கல்விக்கு கைகொடுக்கும் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

'மாற்றத்தை நோக்கிய பயணம், தமிழ் மக்களின் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக' என்னும் தொனிப்பொருளில் கல்வியைத் தொடரமுடியாத மாணவர்களின் கல்விக்கு கைகொடுக்கும் செயற்றிட்டம் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றது.

இச் செயற்திட்டத்தின் ஓரங்கமாக தைப்பொங்கல் நிகழ்வில் அரசியல் கைதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றும்நடைபெற்றிருந்தது.இம் கலந்துரையாட லில் குறித்த கைதிகளின் பிள்ளைகளின் கல்விக்கான உதவிகள் செய்து தரப்படும் என்ற உறுதிமொழி வி.ஜனகனால் வெலிக்கடை, மகசின் சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு வழங்கப்பட்டது .

இதனடிப்படையில் கடந்த மாதம் தமிழர் முன்னேற்றக் கழகத்தின் கிளிநொச்சி, வவுனியா, மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கான விஜயத்தின் போது, குறித்த கைதிகளின் குடும்ப உறுப்பினர்கள் பிள்ளைகள் என்போரை சந்தித்து அவர்கள் அனைவரினதும் பிள்ளைகளுக்கு இந்த வருடம் முழுவதற்குமான அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.மேலும் பல உதவிகள் அடுத்த கட்டமாக அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது .

இச் செயற்றிட்டம் தமிழர் முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் இணைப்பாளர்கள் மூலமாக குறித்த கைதிகளின் குடும்பங்களுக்கு கொண்டு சேர்க்கப்படுகின்றது. அத்தோடு அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நேரடியாகவும் வந்து அப்பியாசக் கொப்பிகளைப் பெற்றுச் செல்கின்றனர் . இத்திட்டமானது குறிப்பிட்ட வரையறைக்குள் நின்று செயற்படாமல் அனைத்து மக்களையும் உள்ளடக்கியதாகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றது . திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கைதிகளின் பிள்ளைகளுக்கு எதிர்வரும் வாரத்தில் குறித்த செயற்றிட்டம் தொடர்ச்சியாக நடைமுறைபடுத்தப்படவுள்ளது.என அறிவித்துள்ளனர். (11)

# முறைதவறிய கழிவகற்றல்; குளப்பிட்டி சந்தையருகில் துர்நாற்றம்

(திருநெல்வேலி)

கொக்குவில் குளப்பிட்டி சந்தையில் தினமும் மீன் விற்கும் பகுதியைக்கழுவும் போது வெளியேறும் கழிவு நீர் காங்கேசன்துறை வீதியின் கரையோரமாக இருக்கும் வாய்க்காலுக்குள் குழாய் மூலம் வந்து விழுந்து தேங்குவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியில் குடியிருக்கும் மக்களும், வர்த்தக நிலையங்களை நடாத்தும் வர்த்தகர்களும், வீதியால் போக்குவரத்து செய்யும் பயணிகள் மற்றும் மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாய்க்காலுக்குள் கழிவு நீர் தேங்குவதால் இலையான்கள் அதிகளவு காணப்படுவதுடன் நுளம்புத் தொல்லையும் அதிகரித்துள்ளது. குடம்பிகள் பெருகி டெங்கு நோயையும் ஏற்படுத்தும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இவ்வாய்க்கால் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. மீன் சந்தையைக் கழுவும் போது கழுவிய நீர் வாய்க்காலுக்கு பெரிய குழாய் ஒன்றின் மூலம் வந்து விழுகிறது. இந்நீர் வழிந்தோட முடியாத நிலையில் அங்கேயே தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுவதோடு, நுளம்புகள், இலையான்களின் இருப்பிடமாகவும் மாறிவிடுவதாகத் தெரிகிறது.

இதுபற்றி சுகாதாரப் பரிசோதகருக்கும் அப்பகுதி மக்கள் வர்த்தகர்கள், மாணவர்களினால் அறிவிக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். பொது மக்களின் நலன் கருதி சம்பந்தப்பட்டவர்கள் இதுபற்றி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலராலும் கோரிககை விடப்பட்டுள்ளது. (137)

# இலங்கை பல்கலைக்கழக விளையாட்டு சங்கத் தலைவராக கண்ணதாசன்

இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டு சங்கத்தின் தலைவராக எஸ்.கண்ணதாசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விளையாட்டு ஆலோசனை சபைத் தலைவர் கண்ணதாசன் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டு சங்கத்தின் (Sri Lanka Universities Sports Association-SLUSA) ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சங்கத்தின் நடப்பு வருடத்திற்கான (2015/2016) தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள 14 அரச பல்கலைக்கழகங்களினையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இச்சங்கத்தினது வருடாந்தப் பொதுக் கூட்டமானது 'வயம்ப' பல்கலைக்கழகத்தில் மேற்படி திகதியில் நடைபெற்றது.


எஸ்.கண்ணதாசன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளராவார். இச்சங்கத்திற்கு தலைவராக முதன்முறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து ஒருவர் தெரிவுசெய் யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.



அடுத்தவருடம் (2016) நடைபெறவுள்ள 12ஆவது இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நடாத்தவுள்ள நிலையில் இந்நியமனம் இடம்பெற்றுள்ளது.

# வாரம் ஒரு காரம்

**வேதாளம் மீண்டும் முருக்க மரத்தில் ஏறுகின்றது. சர்வதேச விசாரணை என்கின்ற பெயரில் சாதகமாக வந்த இணக்கத்தையும் சாகடிக்கப் போகின்றார்கள்.**




தமிழர் தீர்வு தொடர்பாக அரசு அசமந்தப் போக்கா?.... அப்படியானால் நீங்கள் கூறிய மனச்சாட்சி எங்கே?.....



**உள்வீட்டில் இணக்கப்பாடிருந்தும் சர்வதேசத்திடம் கோள் சொல்லும் வரலாற்றுத் தவறுகள் மீண்டும் ஆரம்பமாகின்றன.**
**அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளரிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். அவை தொடர்பாக சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்து வெளியிடும் போது பின்வருமாறு தெரிவித்தார்.**

- போர்க்குற்றம் தொடர்பாக தற்போதைய அரசு கூறிவரும் உள்ளக விசாரணைப் பொறிமுறையினை நாம் ஒருபோதும் ஏற்க மாட்டோம்.
- சர்வதேச விசாரணை தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட வேண்டும்.
- இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போர்க்குற்ற விசாரணை அறிக்கை திட்டமிட்டவாறு மார்ச் மாதம் ஜெனிவா அமர்வில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதில் எந்த மாற்றமும் ஏற்படக்கூடாது.
- அதில் சொல்லப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும் அமெரிக்கா கண்காணிக்க வேண்டும்.
- தற்போதைய புதிய இலங்கையரசு தமிழர் விடயத்தில் அசமந்தப் போக்காக நடந்து வருகின்றது.
- 100 நாள் வேலைத்திட்டத்தில் தமிழர் தீர்வு தொடர்பாக எதுவும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.
- அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை.
- உயர் பாதுகாப்பு வலயங்கள் எனும் பெயரில் உள்ள பிரதேசங்கள் விடுவிக்கப்பபடவில்லை.
- இது தொடர்பாக மைத்திரி அரசுடன் பேசி அமெரிக்கா ஓர் தீர்வினை எமக்குத் தரவேண்டும்.

என பிஸ்வாலிடம் கூட்டமைப்பு முறையிட்டுள்ளதாக சுரேஷ் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த போர்க்குற்றங்களிற்கு காரணமென இவர்கள் கருதும் மகிந்த ஆட்சி தற்போது இல்லையே. மீண்டும் போர்க்குற்ற மென்கின்ற பெயரில் வஞ்சங்களிற்கு பழிதீர்க்க முற்படுவதால் எதிர்ப்புக்களும் குரோதங்களும் தான் மிச்சமாகும். இது அரசை மீண்டும் இயங்கவிடாது தீர்வுகளையும் திசைமாற்றும். ஆகவே இதற்கு அப்பால் சர்வ கட்சி அங்கீகாரங்களுடன் எதிர்கால தீர்வினை சிந்திப்பதே ஆரேக்கியமானது என தற்போதைய அரசு கருதுகின்றது. இது ஒரு புறமிருக்க,

**மகிந்த அரசு தேர்தலில் தோற்றாலும் போர்க்குற்ற மென்கின்ற பெயரில் எவரையும் பழிவாங்கமாட்டோம் என மைத்திரியின் தேர்தல் பிரச்சாரங்களில் மைத்திரி தெளிவாகத்தானே கூறியிருந்தார். இதையெல்லாம் தெரிந்து தானே மைத்திரியரசை ஆதரிக்கும்படி கூட்டமைப்பு மக்களைக் கோரியது. தற்போது ஏன் இதை சாட்டாக வைத்து கூட்டமைப்புக் குழப்புகின்றது?.....**

காணாமற்போனோரை மீட்டுத்தரக் கோருவது, வாழ்விடங்களை விட்டு இராணுவத்தை விலகக்கோருவது நியாயமானது. அதை விடுத்து போர்க்குற்றமென்கின்ற பெயரில் இருக்கும் நிலைகளில் இருந்து விலகி பழைய நிலைகளை கிளற முற்படுவோமேயானால்... இனவாதத்தை பேரினவாதத்தின் மத்தியில் நாமே தூண்டிவிடும் செயலாக இது மாறிவிடுமல்லவா!... முன்பும் இது தான் நடந்தது அரசோடு அனுகிப்போய் சாதுரியமாக தீர்வைப் பெற இவர்கள் முயற்சிக்க வுமில்லை முயற்சித்தவர்களிற்கு மக்கள் அதிகாரங்களை வழங்கவுமில்லை. அரசு எட்டடி பாய நாம் பதினாறடி பாய்ந்து இனவாதங்களை நாமே தூண்டி நமது அழிவை நாமே தீர்மானித்ததுதான் மிச்சமாச்சு.

இவை யெல்லாம் தமிழ்த்தேசியம் பேசும் தலைகளிற்குப் புரியாமலில்லை. புரிந்தமையால்தான் இவ்வாறு குளப்புகின்றார்கள். நாடாளுமன்றத் தேர்தல் வருகின்றது நாவுக்கு இனிமையாகப் பேசி அரசை எதிர்த்தால் தானே தமிழ்மக்களிற்கு கூட்டமைப்பின் தேவையைக் கூறலாம்.

இவ்வாறு 100 நாள் திட்டத்தில் தமிழர் தீர்வு தொடர்பாக எதுவும் சேர்த்துக கொள்ளவில்லையென தெரிந்தும் ஏன் அந்த அரசை தேர்தலில் ஆதரித்தீர்கள்?.... ஆட்சிமாற்றம் வேண்டியா?.... அப்படியானால் தற்போது மீண்டும் ஓர் ஆட்சி மாற்றம் தேவையா?.... சரி, அப்படியென்றால் தற்போது ஏன் சுதந்திர தினத்தில் கலந்து கொள்கின்றீர்கள்?.....

ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகின்றது. தென்னிலங்கை ஆட்சி மாற்றங்களால் என்றுமே தமிழர்க்கு விடிவு வராது – கூட்டமைப்பை குழி தோண்டிப் புதைத்தாலன்றி.

– வெண்கட்டியன்

# மைத்திரியின் வெற்றியால் விசித்திரமாக நிகழ்ந்த நேர்த்தி



(கொழும்பு)

மைத்திரிபால சிறிசேன் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என் காணிக்கை வைத்த ஆனமடுவ நாகவில பிரதேச நபர் ஒருவர் நேற்று முன்தினம். தனது காணிக்கையை விசித்திரமான முறையில் நிறைவேற்றியுள்ளார்.

ஆனமடுவ நாகவில பிரதேசத்தில் வசிக்கும் சனத்குமார என்ற நபர். ஆனமடுவ சேருகலயில் உள்ள பிரசித்திபெற்ற விகாரையில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் அதற்கு நன்றிக்கடனாக தாம் மூன்று கிலோமீற்றர தூரம் (தவழ்ந்து) வருவதாக சத்தியம் செய்துள்ளார்.

அதன்படி மைத்திரிபால சிறிசேன அவர்களின் வெற்றியின் பின்னர் நேற்று முன்தினம் மூன்று கிலோமீற்றர்கள் தூரத்தை சுமார் மூன்று மணிநேரம் தவழ்ந்து குறிப்பிட்ட விகாரையை சென்றடைந்துள்ளார்.

# சீனாவுடனும் உறவுகளை வலுப்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு

(கொழும்பு)

**இந்தியாவிற்கு சார்பான கொள்கைகளை புதிய அரசாங்கம் கடைப்பிடிப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லையெனவும், சீனாவுடனும் உறவுகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார**

இதுதொடர்பாக சர்வதேச ஊடகமொன்றுக்கு பேட்டியளித்த அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட உள்ள இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா அறிக்கையை எதிர்கொள்வதற்காக நம்பிக்கையான உள்நாட்டு விசாரணை ஒன்றை நடத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டு வருகிறது.

போர்க்குற்றங்கள் சம்பந்தமாக இலங்கையர் எவரையும் சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல இடமளிக்கப் போவதில்லை இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா அறிக்கையை எதிர்கொள்வதற்காக நம்பிக்கையான உள்நாட்டு விசாரணை ஒன்றை நடத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டு வருகிறது.

போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்தக் கோரிய நாடுகளுடனும் இது சம்பந்தமாக பேச்சு நடத்தப்பட்டுள்ளது. உள்நாட்டு விசாரணைகளுக்கு அவர்களின் உதவிகள் கோரப்பட்டுள்ளன.

செயற்பாட்டு ரீதியான வெளிநாட்டுக் கொள்கை இருந்தால், மேற்குலக நாடுகள் அதனை புறந்தள்ள முடியாது.

புதிய அரசாங்கம் இந்தியாவுக்கு சார்பான கொள்கையை கடைப்பிடிப்பதாக சுமத்தப் படும்



குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கின்றோம்.

இந்தியாவுடன் மாத்திரமல்ல சீனாவுடனும் உறவுகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்வரும் மார்ச் மாதம் ஜனாதிபதி சீனாவுக்கு விஜயம் செய்ய உத்தேசித்துள்ளார் என்றும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

# முன்னாள் அமைச்சர்களுக்கு இரண்டு வாகனங்கள்

தற்போது எதிரணியில் அமர்ந்திருக்கும், முன்னாள் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், மறறும் மேற்பார்வை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா இவ்விரு வாகனங்களை வழங்கும்படி ஜனாதிபதி செயலகம் சுற்றுநிருப்மொன்றை அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி முன்னாள் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் கடமையாற்றிய இலாகாவுக்குப் பொறுப்பான அமைச்சுக்களின் ஊடாகவே இவ்விரு வாகனங்களும், அதற்கான சாரதிகள் மற்றும் எரிபொருள் என்பன வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலக மேலதிக செயலாளர் சமன் வடுகேயின் கையெழுத்தோடு இச்சுற்று நிருபங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

# கடத்தப்பட்ட வான் விற்பனை முன்னாள் புலி உறுப்பினர் கைது




(மட்டக்களப்பு)

கடத்தப்பட்ட வானை போலியான முறையில் இலக்கம் மற்றும் வர்ணங்களை மாற்றி விற்பனை செய்ய முற்பட்ட முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்க(புனர்வாழ்வு அளிக்கப்பட்ட புலி உறுப்பினர்) உறுப்பினரை மட்டக்களப்பு மாவட்ட விஷேட பொலிஸார நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மானிப்பாயைச்சேர்ந்த குலேநதிரன் கார்த்தீபன் என்ற குறித்த சந்தேக நபர் 56-5647 என்ற வானைக்கடத்தி அதன் எஞ்ஜின் இலக்கம் மற்றும் வர்ணத்தையும் மாற்றி காத்தான்குடிக்கு எடுத்து வந்து வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்ய முயன்றுள்ளார்.

குறித்த வான் தொடர்பில் எழுந்த சந்தேகத்தின்பேரில் விசேட பொலிஸ் பிரிவிற்கு அறிவித்ததை அடுத்து குறித்த நபரும் வாகனமும் கைது செய்யப்பட்டதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.வெதகெரத தெரிவித்தார்

# விசாரணையை துரிதப்படுத்த அதிகாரிகள் அதிகரிப்பு

கல்வி அமைச்சின் விசாரணை நடவடிக்கைளை மேலும் துரிதப்படுத்தும் நோக்கில் அமைச்சின் விசாரணை அதிகாரிகளின் எண்ணிக்கை 50ஆல் அதிகரிக்கப்படடுள்ளது.

இந்த விசாரணைப் பிரிவு மேலதிக் செயலாளர் ஒருவரின் பூரண கண்காணிப்பின் கீழ் இயங்கும் என கல்வியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய பாடசாலைகள் மற்றும் ஏனைய பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் முறைப்பாடுகள் உள்ளிட்ட கல்விசார்ந்த முறைப்பாடுகளை இந்த பிரிவிற்கு தெரிவிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு தொலைபேசியிலிருந்தும் 1988 அல்லது 011 278 50 70 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என கல்வியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

# மேலும் 36 ராஜதந்திரிகளை நாடுதிரும்புமாறு பணிப்பு

(கொழும்பு)

அரசியல் செல்வாக்கில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் இராஜதந்திரிகளாக நியமிக்கப்பட்ட; மேலும் 36 பேரை நாடு திரும்புமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு பணித்துள்ளது.

கடந்த புதன்கிழமை நடந்த கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களில், அரசியல் செல்வாக்கில் இரண்டாவது, மூன்றாவது செயலர்களாகவும், மினிஸ்டராகவும், நியமிக்கப்பட்ட 36 பேரையே நாடு திரும்புமாறு உத்தரவிடப்பட்டுள்ளது,

இவ்வாறு திருப்பி அழைக்கப்பட்டோரில், பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்லவும் அடங்கியுள்ளார்.

அவர் தற்போது அவுஸ்ரேலியாவில் பணியாற்றி வருகிறார்.

அதேவேளை, அரசியல் செல்வாக்கில் தூதுவர்களாக நியமிக்கப்பட்ட 29 பேரை நாடு திரும்புமாறு புதிய அரசாங்கம் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் கைதிகளின் விடுதலை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம்

(கொழும்பு)

அரசியல் ஸ்க்திகளை விடுதலை செய்ய வலியுறுத்தி பதாகையில் கையொப்பம் திரட்டும் நடவடிக்கை முன்னிலை சோஷலிஸக் கட்சியால் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை வரை இந்தப போராட்டம் தொடர்ந்து. இடம் பெறும். நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக இந்தக் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக் கப்பட்டது.

முன்னிலை சோஷலிஸக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பலர் இதில் பங்கேற்றனர். கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக காட்சிப்படுத்தப்பட்டிருந்த வெள்ளை நிற பதா




கையில், “அரசியல் கைதிகளை விடுதலை செய்!“, “காணாமல் ஆக்கப்படுவதை - கடத்தல்களை வெளிப்படுத்து!“, “குமார் குணரட்னத்தின் அரசியல் உரிமையைப் பறிக்காதே! என வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்தக் கையெழுத்து வேட்டை நாடு முழுவதும் கொண்டு செல்லப்படவுள்ளது.

இதற்கமைய நேற்று களுத்துறையிலும், இன்று காலியிலும், நாளை அநுராதபுரத்திலும், 9 ஆம் திகதி கேகாலையிலும், 10ஆம் திகதி பதுளையிலும், 11ஆம் திகதி கண்டியிலும் இடம் பெறவுள்ளன.

# ஸ்ரெஸ்கான் ஆலோசனை நிறுத்தியது அரசாங்கம்

(கொழும்பு)

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், தமது வெளிநாட்டு முதலீடுகளுக்காக சர்வதேச நாணய நிதியத்தின் முன்னாள் தலைவர் டொமினிக் ஸ்ரெஸ்கானிடம் இருந்து பெற்று வந்த ஆலோசனை சேவையை நிறுத்திக் கொள்வதற்கு புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அவருக்கு இலங்கையின் முன்னைய அரசாங்கம் 750,000 அமெரிக்க டொலர்களை சேவைக்காக வழங்கிவந்தது. எனினும் அவரிடம் இருந்து எவ்வாறான சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன என்பது தெரியவில்லை.


இந்நிலையில் அவரின் சேவை அவசியம் இல்லை என்று தமது அரசாங்கம் நினைப்பதா




கவும், நாங்கள் எங்கள் சொந்த நிர்வாகத்தினால் சேவைகளைப் பெற முடியும் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஸ்ரெஸ்கான், ஏற்கனவே பிரஸ்லஸ், பாரிஸ் மற்றும் வாஷிங்டன் ஆகிய நகரங்களில் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது


38. அருகே உள்ள பாத்திரத்தில் குளிர்பானம் நிரப்பப்பட்டு உள்ளது. தேவைக்காக 1 லீற்றர் 125 மில்லிலீற்றர் பானம் எடுக்கப்பட்டது. மீதியாக உள்ள குளிர்பானத்தின் அளவு யாது? ..........................................





39. அருகில் தரப்பட்ட உருவின் சுற்றளவு யாது? ..........................................




40. அருகில் தரப்பட்ட சதுரக்கோட்டுப்படம் சமபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 0.6 பகுதியை நிழற்றுக




41. கீழே உள்ள பாத்திரத்தில் 3 / 4 லீற்றர் நீர் இருக்க வேண்டும். எனில் எவ்வளவு நீரை வெளியே எடுக்க வேண்டும். ..............





42. ஒரு பண்ணையில் வளர்க்கப்படும் நான்கு வகை விலங்குகளைக் குறிப்பிடும் பூரணமற்ற வரைபு உருவில் காணப்படுகின்றது. அங்கு வளர்க்கப்படும் முயல்களின் எண்ணிக்கை அங்குள்ள வாத்துக்கள் எண்ணிக்கையினதும் கோழிகளின் எண்ணிக்கையினதும் கூட்டுத்தொகைக்குச் சமம்

(i) முயல்களின் எண்ணிக்கையை உரிய நிரலில் குறித்து அந்நிரலை நிழற்றுக

(ii) பண்ணையில் உள்ள விலங்குகளின் மொத்த எண்ணிக்கை யாது?




43. காட்டப்பட்டுள்ள உருவின் சுற்றளவு யாது? ..........................................





44. பயணத்தை ஆரம்பிக்கும் போது ஒரு வாகனத்தின் மானியில் இலக்கங்கள் பின்வருமாறு பதியப்பட்டிருந்தன

| 0 | 3 | 3 | 4 | 2 | 1 | km |
|---|---|---|---|---|---|---|


குறித்து வாகனம் தனது பயணத்தை முடிக்கும் போது மானியில் கீழ் உள்ளவாறு பதியப்பட்டிருந்தது. எனின் வாகனம் பயணஞ் செய்த தூரம் யாது? ..........................................

| 0 | 3 | 3 | 4 | 0 | 2 | km |
|---|---|---|---|---|---|---|

45. வழங்கப்பட்டுள்ள சதுரக்கோட்டுப்படம் சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன் மொத்தப் பரப்பளவில் நிறந்தீட்டப்பட்ட பகுதியை பின்னத்தில் குறிப்பிடுக. ..........................................



46. தரம் ஐந்து மாணவர்களின் பாடசாலை வரவுகள் பற்றிய விபரம் கீழே வரைபில் காட்டப்பட்டுள்ளன



(i) அதிகமான மாணவர்கள் வருகை தந்த நாள் எது? ..........................................

(ii) திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது? ..........................................



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்




# கல்வி முரசு

1 தொடக்கம் 46 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையை எழுதுக

01. ஒரு வாளியில் 1850ml பால் விற்பனைக்கு உள்ளது. இன்னொரு வாளியில் 1675ml பால் விற்பனைக்கு உள்ளது. அங்கு விற்பனைக்கு உள்ள மொத்தப் பாலின் கனவளவு யாது? ..........................................


02. இக்கடிகாரத்தில் உள்ள கோணம் செங்கோணமாவதற்கு இன்னும் எத்தனை நிமிடம் செல்ல வேண்டும் ..........................................



03. திருமணத்திற்கு வருகை தந்த ஆண்களின் எண்ணிக்கை 749 ஆகும். திருமணத்திற்கு வருகை தந்த பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையிலும் பார்க்க 151 அதிகமாகும். வந்த பிள்ளைகளின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையிலும் பார்க்க 54 குறைவாகும். அத்திருமணத்திற்கு வந்த மூன்று பிரிவினரதும் மொத்த எண்ணிக்கை யாது? ..........................................

04. கூட்டுக $\frac{4}{6} + \frac{2}{3} =$ ..........................

05. வழங்கப்பட்டுள்ள சதுரக்கோட்டுப்படம் சம பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் நிறந்தீட்டப்பட்ட பகுதிக்கும் நிறந்தீட்டப்படாத பகுதிக்கும் இடையிலுள்ள வித்தியாசம் யாது? ..........................................




06. 3 / 4 kg தேயிலையை 25g கொண்ட எத்தனை பைகளில் அடைக்கலாம்? (..........................................)

07. தந்தையிடம் உள்ள காணியில் $\frac{2}{10}$ பங்கை மகனுக்கும் $\frac{3}{5}$ பங்கை மகளுக்கும் கொடுத்தால் தந்தையிடம் எஞ்சியுள்ள காணி என்ன பங்கு? (..........................................)


08. 24 தேசிப்பழத்தில் 9லீற்றர் குளிர்பானம் தயாரிக்கலாம். 3l குளிர்பானம் தயாரிக்க எத்தனை தேசிப்பழங்கள் தேவைப்படும்?

(..........................................)

09. இக்கடிகாரம் 25 நிமிடம் முந்திச் செல்கிறது. எனின் சரியான நேரத்தை கீழே உள்ள கடிகாரத்தில் குறித்துக் காட்டுக (..........................................)





10. உருவில் உள்ள சதுரமுகியின்



(i) உச்சிகளின் எண்ணிக்கை யாது? ..........................................

(ii) விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ..........................................

11. பின்வரும் உருவில் உள்ள ஒவ்வொரு சிறிய சதுரத்தினதும் ஒருபக்க நீளம் 1cm ஆகும் இங்கு நிழற்றப்பட்ட பகுதியின்



(i) பரப்பளவு யாது? ..........................................

12. கீழே தரப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசைப்படுத்தி மீண்டும் எழுதுக

0.9, 0.1, 0.7, 0.4 1.1 (.....................................)

13. ஒரு பண்ணையில் உள்ள மாடுகளின் எண்ணிக்கை 750 ஆகும். அங்குள்ள ஆடுகளின் எண்ணிக்கை மாடுகளின் எண்ணிக்கையைப் போன்று இரு மடங்காகும். அங்கு உள்ள வாத்துக்களின் எண்ணிக்கை ஆடுகளின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 30 அதிகமாகும். பண்ணையில் உள்ள மூன்று உயிரினங்களினதும் மொத்த எண்ணிக்கை யாது?

14. ஒருவருக்கு 8 பென்சில்கள் வீதம் 271 பென்சில்களை எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்? மீதி எத்தனை?

.....................................

15. போத்தல் ஒன்று 1200ml நீரைக் கொள்ளும். இவ்வறான 9 போத்தல்கள் கொள்ளும் நீரின் கனவளவு யாது?

.....................................

16. ஓர் இனிப்புப்பான போத்தல் மூன்று பேரை உபசரிக்கத் போதுமானதாகும். 22 பேரை உபசரிக்கத் தேவையான இனிப்புபான போத்தல்களின் எண்ணிக்கை யாது? .....................................


17. ரூபா 4000 இன் அரைப்பங்கு 6500 ரூபாவின் அரைப்பங்கிலும் எத்தனை ரூபா குறைவாகும்?

.....................................

18. எனது நிறையைப் போன்று நாலுமடங்கு எனது தாயின் நிறை தாயின் நிறை. 64kg 800g எனது நிறை யாது? .....................................

19. 


இக்கடிகார நேரம்மு.ப 1.10 ஆகும். இக்கடிகாரத்தில் இன்னும் 45 நிமிடம் சென்ற பின்னர் காட்டும் நேரத்தை 24 மணிக்கடிகாரத்தில் குறித்துக்காட்டுக



20. முறையே $\frac{1}{2}L$, $\frac{1}{4}L$, $\frac{3}{4}L$ நீரைக்கொள்ளும் பாத்திரங்கள் மூன்று உள்ளன. இவற்றை ஒரு பாத்திரத்தில் ஊற்றினால் பெரிய பாத்திரத்தின் கொள்ளளவு யாது?


.....................................

21. புதிய ஆண்டுக்கு வகுப்பேற்றப்பட்டுள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கணித பாடப்புத்தகங்களின் எண்ணிக்கை 1975 ஆகும். அம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட தமிழ்ப்பாடப் புத்தகங்களின் எண்ணிக்கையானது கணிதப்பாடப் புத்தகங்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 55 அதிகமாகும். அம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ஆங்கிலப் புத்தகங்களின் எண்ணிக்கையானது கணிதப்பாடப் புத்தகங்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 65 குறைவாகும். மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மூன்று பாடப் புத்தகங்களினதும் மொத்த எண்ணிக்கை யாது? .....................................

22. 


உருவின் சுற்றளவு யாது? .....................................

23. அருகில் உள்ள உருவின் பெயர் யாது? .....................................



(i) அதன் உச்சிகள் எத்தனை? .....................................

(ii) அதன் விளிம்புகள் எத்தனை? .....................................

(iii) அதன் முகங்கள் எத்தனை? .....................................

24. ஒரு தந்தை ஒரு தொகைப்பணத்தின் $\frac{1}{2}$ பங்கை மகனுக்கும் மீதியில் $\frac{1}{2}$ பங்கை மகளுக்கும் கொடுத்தால் தந்தைக்கு மீதியாக உள்ள பணத்தொகை என்ன பங்காகும்? .....................................

25. 1kg கருவாடு ரூ 85.00 ஆகும். 200g கருவாடு வாங்குவதற்கு ரூ 15.00 ஐ மாத்திரம் கொண்டு சென்றால் குறையும் தொகை எவ்வளவு? .....................................



26. சட்டைத்துணி ஒரு மீற்றர் ரூ.62.50 ஆகும். சட்டை துணி 25மீற்றர் வாங்குவதற்கு உள்ள பணம் 1000 ரூபாவாயின் தேவையான மீதிப்பணம் எவ்வளவு?

.....................................


27. அப்பிள் 5 இன் விலை ரூபா 40.00 ஆகும். அமலியிடம் ரூ.50.00 உண்டு. அவள் 25 அப்பிள்கள் வாங்குவதற்கு இன்னும் எவ்வளவு பணம் தேவையாகும்?

.....................................

28. அமலி அப்பிள் பழத்தின் $\frac{1}{2}$ பங்கை தனது தங்கைக்குக் கொடுத்த பின் மீதியில் $\frac{1}{2}$ பங்கை தம்பிக்குக் கொடுத்தாள்.
மீதியை அவள் உண்டாள். அமலிக்கு எஞ்சியது அப்பிள் பழத்தின் என்ன பின்னம்?

.....................................

29. உருவில் ஒரு நான்முகி காணப்படுகின்றது அதன்



(i) முகங்களின் எண்ணிக்கை யாது? .....................................

(ii) உச்சிகளின் எண்ணிக்கை யாது? .....................................

30. இருபதாயிரத்து ஐம்பது என்பதை இலக்கங்களில் எழுதுக .....................................


31. பயணத்தை ஆரம்பிக்கும்போது ஒரு வாகனத்தின் மானியில் இலக்கங்கள் பின்வருமாறு பதியப்பட்டிருந்தன

| 0 | 1 | 2 | 9 | 9 | 9 | km |
|---|---|---|---|---|---|---|

வாகனம் மேலும் பத்துக் கிலோமீற்றர் சென்ற பின்னர் மானியில் பதிவாகும் இலக்கங்களை வெற்றுக் கூடுகளினுள்ளே எழுதுக

| | | | | | | km |
|---|---|---|---|---|---|---|

32. அருகில் உள்ள கூம்பகத்தின்




(i) விளிம்புகளின் எண்ணிக்கை யாது? .....................................

(ii) முகங்களின் எண்ணிக்கை யாது? .....................................

33. தரப்பட்டுள்ள இலக்கங்கள் நான்கையும் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண் யாது? .....................................

| | |
|---|---|
| 1 | 8 |
| 6 | 9 |

34. கனவுரு ஒன்றின் அமைப்பு கொடுக்கப்பட்டுள்ளது




(i) முகங்களின் எண்ணிக்கை யாது? ............

(ii) உச்சிகளின் எண்ணிக்கை யாது? ............

35. 9010 உடன் 91ஐக் கூட்டுக. கூட்டுத்தொகை யாது? .....................................

36. 8050 இலிருந்து 450ஐக் கழிக்க வித்தியாசம் யாது? .....................................

37. தரம் 1இல் உள்ள மாணவர்கள் விரும்பி உண்ணும் பழங்கள் பற்றிய தகவல்கள் வரைபில் காண்படுகின்றன




(i) திராட்சைப் பழத்தை விரும்புவோருக்கும் அப்பிள் பழத்தை விரும்புவோர்க்கும் இடையில் உள்ள வித்தியாசம் யாது?

(ii) ரம்புட்டானை விரும்பும் மாணவர்களினது எண்ணிக்கையானது திராட்சைப் பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையினதும் தோடம்பழங்களை விரும்பும் மாணவர்களினது எண்ணிக்கையினதும் கூட்டுத்தொகையின் அரைவாசி ஆகும். அவ்வெண்ணிக்கையை உரிய நிரலில் குறிக்குக நிரலை நிழற்றுக



காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை (02) நடைபெற்ற கும்பாபிஷேக பெருவிழாவில் சீதா என்ற யானை முன்னே செல்ல பூரண பிரதான கும்பங்கள் கொண்டுசெல்வதனையும் புதிதாக அமைக்கப்பட்ட கோபுரத்தின் பஞ்ச கலசங்களுக்கும் அபிஷேகம் நடைபெறுவதையும் காணலாம். (50)

# பண்பாட்டு பெருவிழா

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச பண்பாட்டுப் பெரு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2.00 மணிக்கு புதுக குடியிருப்பு பிரதேச செயலக மண்டபத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் இ.பிரதாபன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி.உஷா சுபலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

இவ்விழாவில் புதுவையாள் பண்பாட்டு மலர் வெளியீடு, புதுக்குடியிருப்புப் பிரதேச கலைஞர்கள் மதிப்பளிப்பு, மற்றும் கலைநிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளன. (160)

# கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாடகவிழாவிற்கு விண்ணப்பங்கோரல்

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைக் கழகத்தின் அரச நாடகக் குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யும் 2015 அரச சிறுவர் நாடக விழாவிற்கும் 2016 அரச குறு நாடக விழாவிறகும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் அரச சிறுவர் நாடகம் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட நாடகங்களை அனுப்ப முடியும் விண்ணப்பத்தை பு,ரணப்படுத்தி 3 நாடகபிரதிகளுடனும அனுப்ப வேண்டும் கடித உறையின் இடதுபக்க மூலையில் அரச சிறுவர் நாடகவிழா 2015 என்று குறிப்பிடவும்

அரச குறுநாடகம் (சிங்களம், தமிழ்) ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டிருப்பதுடன் விண்ணப்பத்துடன் 3 நாடகப் பிரதியுடனும் 3 சாராம்சப் பிரதிகளுடனும் அனுப்பவேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மூலையில் அரச குறுநாடக விழா 2016 என குறிப்பிட வேண்டும். இரண்டுக்குமான விண்ணப்பங்களை மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் அரச நாடகக் குழு கலாசார அலுவல்கள் திணைக்களம் 8 ஆம் மாடி செத்சிரிபாய பத்தரமுல்ல என்றமுகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்படிவங்களை சகல மாவட்ட செயலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# திணைக்கள காணிகளில் குடியிருப்பு

## காணி உறுதி வழங்குவது குறித்து பரிசீலனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலக பிரிவிலுள்ள கிளிநகர் கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் மக்கள் தங்களுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்குமாறு பல்வேறு தடவைகள் கோரிக்கைகளை முன் வைத்ததன் நிமித்தம் அது தொடர்பான பரிசீலனைகள் தற்போது, இடம்பெற்று வருவதாக கரைச்சி பிரதேச செயலாளர் பொ.நாகேஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநகர் பகுதியில் 177 குடும்பங்கள், நீர்ப்பாசனத் திணைக்களம், மற்றும் ரயில்வே திணைக்களம் ஆகியவற்றின் காணிகளில் குடியிருக்கின்றன. குடியிருக்கும் காணிகளை தங்களுக்குச் சொந்தமாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அம்மக்கள் கோரியுள்ளனர்.

2009ஆம் ஆண்டு கிளிநொச்சியில் மீள்குடியேறிய பின்னர, கிளிநகர் பகுதியில் தாங்கள் குடியேறியபோதிலும் தங்களுக்கான காணி உறுதிப் பத்திரங்கள் இல்லாமையால் தங்களுக்கு வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லையென மக்கள் கூறினர்.

அரச காணிகளை அரசின் அனுமதி பெற்று பொதுமக்களுக்கு வழங்க முடியும். ஆனால் திணைக்களங்களுக்கான காணிகள் திணைக்களங்களின் அனுமதி பெற்றே வழங்கமுடியும.

இது தொடர்பில் கடந்த காலங்களில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டு, கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் கிளிநகர் பகுதியை சென்று பார்வையிட்டனர்.

2012ஆம் ஆண்டு நீர்ப்பாசனத் திணைக்களம் தங்களது காணிகளை நில அளவையாளர்கள் மூலம் அடையாளப்படுத்தியிருந்தது.

கிளிநகர் பகுதியில் காணி உறுதிப்பத்திரம் தேவையான 177 பேரின் பெயர்ப் பட்டியல் வடமாகாண காணி ஆணையாளருக்கு கரைச்சி பிரதேச செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டன.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில சுமார் 6500 பேருக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கவேணடியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 37 பயனாளிகளுக்கு மலசல கூடங்கள்





சங்கானை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஜே/178 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள தாணா ஓடைக் கிராமத்தில் ஞானம் பவுண்டேசன் நிறுவனத்தினரால் 37 பயனாளிகளுக்கு ஏறத்தாழ 80000 ரூபா பெறுமதியில்லான மலசல கூட வசதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம் பெற்றது.

இந் நிகழ்வில் அதிதிகளாக வலி மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் நாகரஞ்சினி. ஐங்கரன், யாழ் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சங்கானைப் பிரதேச செயலர் ஆ.சோதிநாதன் ,சங்கானைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ.சிவகுமாரன்,கிராம உத்தியோகதர் சிவகுமார்,இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர் ஜெகதீசன் உட்பட பல உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந நிகழ்வின் போது முன்னதாக சங்கானை முருகமூர்த்தி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதுடன் தொடர்ந்து அடிக்கல் நாட்டும் நிகழ்வை உத்தியோக பூர்வமாக அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வலி மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரன், சங்கானைப் பிரதேச செயலர் ஆ.சோதிநாதன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

# புதூர் சந்தியில் கவிழ்ந்தது லொறி

## 3 மாடுகள் தலைநசுங்கிப் பலி



வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி சென்று கொண்டிருந்த செத்தல் மிளகாய் ஏற்றிய பாரவூர்தி ஒன்று புளியங்குளத்திற்கும் கனகராயன் குளத்திற்கும் இடையில் புதூர் சந்திக்கு அணித்தாக வீதியில் படுத்திருந்த மாடுகளுடன் மோதியதில் மூன்று மாடுகள் பரிதாபகரமாக தலை நசுங்கி இறந்ததுடன் பாரவூர்தியும் தலை கீழாகப்புரண்டு விபத்துக் குள்ளனது. இவ்விபத்து நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது விபத்துப் பாரதூரமாக இருப்பினும் தெய்வாதீனமாக மனித உயிரிழப்புக்களோ காயமோ எவருக்கும் ஏற்படவில்லை. பாரவூர்தி கடுமையாக சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# உக்ரைனில் உள்நாட்டு போர் தீவிரம்

## போர் நிறுத்தத்துக்கு முஸ்தீபு



உக்ரைன் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ளது. அங்கு அமைதியை ஏற்படுத்த அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி நாடுகள் சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

உக்ரைனின் கிழக்குப் பகுதிகளில் அரசுப் படைகளும் கிளர்ச்சிப் படைகளும் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளன. இந்த உள்நாட்டுப் போரில் கடந்த ஏப்ரல் முதல் இதுவரை 5000 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக கடைப்பிடிக்கப்பட்ட போர் நிறுத்தத்தை அண்மையில் இரு தரப்பும் மீறியதால் அங்கு போர் தீவிரமடைந்துள்ளது. தினமும் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர். ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக ரஷ்யப் பகுதியில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

இந்நிலையில் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி நேற்றுமுன்தினம் உக்ரைன் தலைநகர் கீவுக்கு சென்றார். அங்கு அந்த நாட்டு அதிபர் பெட்ரோ போரோஷென்கோவை சந்தித்து போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவது குறித்து ஆலோசித்தார்.

இதனிடையே பிரான்ஸ் அதிபர் ஹோலாந்தேவும் ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கலும் விரைவில் உக்ரைனுக்கு செல்லவிருக்கின்றனர். அவர்கள் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினையும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

அப்போது மீண்டும் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவது குறித்து முக்கிய ஆலோசனை நடத்தப்படும் என்று தெரிகிறது. இந்தத் தகவலை ரஷ்ய அதிபர் மாளிகை உறுதி செய்துள்ளது.

# டில்லியில் இன்று தேர்தல்



டில்லி சட்டப் பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று சனிக்கிழமை நடைபெறுகிறது. இதையொட்டி, கடந்த சில தினங்களாக நடைபெற்று வந்த அரசியல் கட்சிகளின் உச்சகட்ட பிரசாரம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 6 மணியுடன் முடிவடைந்தது.

கடைசி நாள் என்பதால், மொத்தம் உள்ள 70 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களும் வியாழக்கிழமை காலை முதல் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வாக்கு சேகரித்தனர்.

இத்தேர்தலில் பா.ஜ.க கூட்டணி, ஆம் ஆத்மி, காங்கிரஸ் ஆகிய முக்கிய கட்சிகள் 70 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. 198 சுயேச்சைகள் உள்பட மொத்தம் 673 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இதில் பா.ஜ.க, ஆம் ஆத்மி, காங்கிரஸ் இடையேதான் கடும் போட்டி உள்ளது. இதனால், இத்தேர்தலில் மும்முனைப் போட்டி நிலவுகிறது.

# ஆடம்பரத்தை விரும்பியதில்லை விஜயகாந்த் தெரிவிப்பு



(சென்னை)

நான், என் தொண்டர்களை எப்படி நடத்துவேன் என்பது, என் தொண்டர்களைக் கேட்டால் தான் தெரியும். நான், ஒரு நாளும், எதையும் எனக்காக மட்டும் யோசித்து செயற்பட்டதில்லை. நான், தே.மு.தி.க.,வை ஆரம்பித்த பின், ஒவ்வொரு விடயத்திலும் கட்சி, தொண்டர்களையும் சேர்த்துத்தான் யோசிக்கிறேன்.

நான் எப்போது எங்கு சென்றாலும், மற்ற அரசியல் கட்சித் தலைவர்கள் போல, வெற்று ஆடம்பரங்களை விரும்புவதில்லை. காரணம், ஆடம்பரம் அனைத்தும், தொண்டர்கள் பணத்தை செலவழித்து வருபவை. என் தொண்டர்கள், ஊரை அடித்து உலையில் போடுகிறவர்கள் அல்ல. அரசாங்கத்தை வைத்து, மக்கள் நலனுக்கு எதிராக கொள்ளை கொள்ளையாக சம்பாதித்தவர்கள் அல்ல. கட்சிக்காக அவர்கள் செலவழிக்கும் பணம் முழுக்க முழுக்க, அவர்களின் சொந்தப் பணம்.

அதனால் தான், நான் எங்கு சென்றாலும், வழிநெடுக என்னை வரவேற்று விளம்பரப் பலகைகள் வைப்பதை விரும்புவதில்லை. இது போன்ற செலவுகளையெல்லாம் செய்ய வேண்டாம் என, நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். கட்சித் தொண்டர்கள் பணக்காரர்கள் அல்ல. எல்லோரும் ஏழை எளியவர்கள். என விஜயகாந்த் தெரிவித்தார்.

# பழிக்கு பழி தீர்த்தது ஜோர்தான்; 55ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பலி



ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் நிலைகள் மீது ஜோர்தான் நடத்திய தாக்குதலில் 55 தீவிரவாதிகள் பலியாகியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை ஜோர்தான் விமானியை உயிருடன் தீயிட்டு கொளுத்திக் கொன்ற வீடியோவை ஐ.எஸ்.ஐ.எஸ் வெளியிட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தீவிரவாதிகளின் இந்த கொடூர செயலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், தங்கள் பிடியில் இருந்த பெண் தீவிரவாதி சஜிதா உட்பட இரண்டு பேரை ஜோர்தான் அரசு தூக்கிலிட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து சிரியாவில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள், பதுங்குமிடங்கள் மற்றும் ஆயுத கிடங்குகள் மீது நேற்று முன்தினம் சரமாரியாக வான்வழி தாக்குதல்களை நடாத்தியது.

இதில் 12இற்கும் மேற்பட்ட போர் விமானங்கள் தீவிரவாதிகளின் நிலைகள் மீது சரமாரியாக குண்டுமழை பொழிந்துள்ளன.

மேலும் இந்த தாக்குதலில் நைன் வேயின் இளவரசன் என்று அழைக்கப்படும் ஐ.எஸ். அமைப்பின் கொமாண்டர் உட்பட 55 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


# சிரியாவில் தாக்குதல் 57பேர் பலி; 140பேர் காயம்

சிரியாவின் தலைநகர் டமஸ்கஸைச் சுற்றி கிளர்ச்சியாளர்கள் தங்கியுள்ள பகுதிகளில் அந்நாட்டு அரசுப் படைகள் நடாத்திய வான்வழித் தாக்குதலில் 57 பேர் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து சிரிய நாட்டின் மனித உரிமைகளுக்கான கண்காணிப்பாளர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கூறியதாவது,

டமஸ்கஸ் மாகாணத்தில் கிழக்கு கௌதாவின் சில பகுதிகளில் கிளர்ச்சியாளர்கள் வசிக்கும் இடங்களை நோக்கி அந்நாட்டுப் படைகள வான்வழித் தாக்குதல் நடத்தின. இதில் 12 குழந்தைகள் உட்பட 57 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலில் சுமார் 140 பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவித்தார். இதனிடையே, கிளர்ச்சியாளர்கள். ரொக்கெட் குண்டுகளை வீசி நடாத்திய பதில் தாக்குதலில், ஒரு குழந்தை உட்பட 10 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# எச்.ஐ.வி.நோயை 15 நிமிடத்தில் கண்டறிய புதிய கருவி அறிமுகம்



(நியூயோர்க்)

எச்.ஐ.வி, சிப்லிஸ் நோய்களை 15 நிமிடங்களில் கண்டுபிடிக்கும் புதிய கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த நோய்க்கான அறிகுறியைக் கண்டறியும் வகையில் இந்த புதிய கருவி அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உயிரி மருத்துவ விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் தயாரித்துள்ள சிறிய வடிவிலான டாங்கிளை, ஸ்மார்ட் போன் மற்றும் கம்ப்யூட்டரில் ஒரு டிவைசாக மாற்றிக் கொள்ளலாம். இதன் மூலம் அந்த டாங்கிள் தனக்குத் தேவையான மின்சாரத்தை கம்ப்யூட்டர் அல்லது ஸ்மார்ட் போனிலிருந்தே எடுத்துக்கொள்ளும்.

இந்த கருவியின் மேற்புறத்தில் கட்டை விரலை வைத்தவுடன், அது தானாகவே கட்டை விரலில் இருந்து இரத்த மாதிரியை எடுத்துக்கொள்ளும். பின்னர் ரத்த மாதிரியை பரிசோதித்து 15 நிமிடங்களில் நோய் இருக்கிறதா என்பதை உடனடியாக தெரிவித்துவிடும். தற்போது இந்நோய்களைக் கண்டுபிடிக்கும் கருவியின் விலை சுமார் 11 இலட்சம் என்ற நிலையில் இந்த புதிய வகை டாங்கிளுக்கு ரூ.2116 மட்டுமேசெலவாகும்

# தாய்வான் விமான விபத்து ஒரு குடும்பம் உயிர் பிழைத்தது



ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளான தாய்வான் விமானத்திலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மீட்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாய்வான் நாட்டின் டிரான்ஸ் ஏசியா ஏர்வேசுக்கு சொந்தமான யுவுசு 72-600 விமானம், சோங்சான்(Songshan) விமான நிலையத்தில் இருந்து கின்மென் (Kinmen) விமான நிலையத்துக்கு 53 பயணிகளுடன் கடந்த புதன்கிழமை புறப்பட்டுள்ளது.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே தென்கிழக்கு சீன கடற்கரையோரத்தில் உள்ள கீலுங்(Keelung) ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்நிலையில் உயிர்பிழைத்த 15 பேரில், லின் என்ற நபர் மற் றும் அவரது குடும்பத்தினர் மூன்று பேரும் அடங்குவர்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், லின் முதலில் விமானத்தின் இடது பக்கம் உள்ள சீட்டில் உட்கார்ந்துள்ளார. ஆனால் விமானத்தின் இறக்கையில் சத்தம் வந்ததை தொடர்ந்து அவரது மனைவி குழந்தையுடன்(2) வலது பக்கம் உள்ள சீட்டுக்கு மாறியுள்ளார்.

இதன்பின் விமானம் விபத்துக்குள்ளான போது அருகிலிருந்த தன் மனைவியை இழுத்து வெளியேற்றியதுடன், தானும் விமானத்திலிருந்து வெளியேறியுள்ளார்.

மீட்புப்படையினர் வருவதற்கு முன்னர் தன் மகனைக் கரைக்குக் கொண்டு சென்று முதலுதவி அளித்து காப்பாற்றியுள்ளார் என கூறியுள்ளனர்.



# தேன்நிலவு அரசியல் எதுவரை தொடரும்

## ஈ.பி.டி.பி.யின் யாழ். ஒருங்கிணைப்பாளர் கேள்வி

(யாழ்ப்பாணம்)

தேசிய அரசியலுக்குள் தாமும இணையவேண்டும் என துடிக்கின்றனர் கூட்டமைப்புக்குள் இருக்கும் ஒருசாரார். இல்லை கடந்த கால கொள்கைகளை கைவிட்டால் புலம்பெயர் தேச சிலரது கோபத்துக்குள்ளாகி கிடைக்கின்ற அரசியல் பதவிகளும் பணங்களும் பறிபோய்விடும் என பதறுகின்றனர் பலர். என்ன செய்ய? தமிழினத்தின் தலை விதியை கடவுள் கூட நிர்ணயிக்க முடியாதளவுக்கு அவர்களது தலையெழுத்து அமைந்துவிட்டது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.

சமகால அரசியற் செயற்பாடுகள் தொடர்பாக யாழ். கட்சி அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆதரவாளர்களுடனான சந்திப்பின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது,

தமிழ் மக்களது தலைவிதியை ஒருபிரிவினர் மட்டும்தான் நிர்ணயிக்க வேண்டும் என்ற மமதையிலிருப்பவர்களுக்கு இலங்கையின் 67 ஆவது சுதந்திர தினம் மத்திய அரசுடன் இணக்கப்பாட்டை கொண்டிருந்தால்தான் எத்தகைய தீர்வுகளானாலும் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்ற யதார்த்தமான ஒரு பாடத்தை சொல்லியிருக்கிறது.

அன்று தமிழ் மக்களது போராட்டத்தை வழி நடத்திய போராளிகளும் இன்றைய அரசியலில் அரசியற் போராளிகளாக மக்களுக்கு சேவைசெய்து வருகின்றனர். இவர்களுள் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் உள்ளடங்கும்.

ஏனைய பல அமைப்புகளைச் சேர்ந்த போராளிகளும் இதில் உள்ளடங்குவர். ஒதுக்கப்பட்ட பல புத்திஜீவிகளும் உள்ளனர். இத்தகைய உதாசீன செயற்பாடுகளின் பரிணாமம் தான் ஊடகவியலாளர் வித்தியாதரனால் உருவாக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் புதிய அரசியற் பிரவேசம். இத்தகையவர்களை எல்லாம் ஒதுக்கி விட்டு தன்னிச்சையாக செயற்பட நினைத்தால் என்றும் எதையும் பெற முடியாது.

நீண்டகாலமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா இலங்கை அரசுகளுடன் இணைந்து தமிழ் மக்களுக்கான உரிமைகளையும் தேவைகளையும் பெற்றுக்கொள்ள முயன்ற போதெல்லாம் எதிர்ப்பரசியலை செய்து கிடைக்கவிருந்த அதிகளவான உரிமைகளை எல்லாம் தூக்கியெறிந்தவர்கள் இன்று படிப்படியாக இணக்க அரசியலுக்குள் பிரவேசித்து இலங்கை அரசுடன் ஒட்டி உறவாடுவதென்பது கடந்தகாலத்தில் துன்பங்களையும் வேதனைகளையும் சுமந்து நிற்கும் எந்தவொரு குடிமகனாலும் ஏற்றுக்கொள்ள முடியாதென்பதுதான் யதார்த்தமான உண்மை.

தமிழ் மக்களது உரிமைக்காக போராடியவர்களை அரசியல் ரீதியில் வழிநடத்தி சென்றவர்களுள் சம்பந்தன் ஐயாவுக்கும் அதிக பங்கு உண்டு. இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக கொண்டாட முடிவெடுத்தவர்களுள் இந்த கூட்டமைப்பும் அவர்கள் சார்ந்த பலருக்கும் பங்குண்டு என்பதை மறந்துவிடக்கூடாது..

1948 இல் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் சிங்கள பௌத்த ஆதிக்கத்தில் மேலோங்கியிருந்தது என்பது வரலாற்று பதிவு. இதனால் தமிழ் மக்களுக்கான உரிமைகளும் தேவைகளும் இரண்டாம் பட்சமாக பார்க்கப்பட்டன. இருந்தும் இந்தியாவினது உதவியுடன் 1987 இலும் பின்னர் 2002 இல் அன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவினாலும் அதிகாரங்களுடன் கூடிய வடக்கு, கிழக்கு இணைந்த மாநில அரசு கையருகில் வந்து நின்றது.

அவற்றையெல்லாம் பெற்றுக்கொள்ளாது போலிக்காரணங்கள் கூறி தமிழர் தலைவர்கள் தாங்கள் மட்டும் தான் என பீற்றித் திரிந்தவர்களது தூரநோக்கற்ற சுயநல நகர்வுகளால் தடுக்கப்பட்டன.

அதன் விளைவுகள் முள்ளிவாய்க்கால் அழிவுகளும் அரசியல் உரிமையில் அதிகாரங்கள் குறைக்கப்பட்டதும், வீதியெங்கும் கையேந்தும் மக்களும், விதவைகளும் அநாதைகளும் மட்டும்தான்.

கடந்துவந்த பாதைகளையும் இலக்குகளையும் தூக்கி எறிந்துவிட்டு சிங்கக்கொடியை தூக்கி காட்டுவதாலும் சுதந்திர தினத்தில் பங்கு கொள்வதாலும் தமிழர் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடும் எனக்கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதொன்றல்ல.

தமிழருக்கு உரிமைகளோ அபிவிருத்திகளோ கிடைத்துவிடக்கூடாதென தமது சுயநலன்களுக்காக தடுத்து வரும் கூட்டத்தினருக்குள் இன்று அதிகளவு உட்கட்சி முரண்பாடுகள் தலைதூக்கிவிட்டன.

நிரந்தரமான கொள்கையற்ற இத்தகையவர்கள் எப்படி தமிழ் மக்களது எதிர்காலத்தை நிர்ணயித்து தருவார்கள் என நம்புகின்றீர்கள்?

மக்களே! ஒருகணம் சிந்தித்துப்பாருங்கள். மத்திய அரசுடன் இருந்து இணக்க அரசியலை மேற்கொண்டு மக்கள் சேவையைச் செய்துவந்த செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் செயற்பாடுகளை முடக்குவதனூடாக கூட்டமைப்பினர் மக்களது அபிவிருத்திகளை தடுப்பதைத்தான் எதிர்பார்க்கின்றனர்.

புலிகளின் பெயரையும் அவரகள் உருவாக்கிய கட்சியையும் அரசியல் பதவிக்காக வைத்துக் கொண்டுள்ள இவர்கள் புலிகளது கொள்கைகளை அவர்களது மறைவின் பின் புதைத்துவிட்டனரா என்பதை மக்களுக்கு தெளிவு படுத்தவேண்டும்.

நிரந்தரமான கொள்கையற்ற இத்தகையவரகளுக்கு மக்கள் வாக்களித்து பலதடவை ஏமாற்றப்பட்டுவிட்டனர். இனியும் மக்களை ஏமாற்ற முடியுமா? அல்லது தொடர்ந்தும் இவர்களை தமது பிரதிநிதிகளாக்கி ஏமாற்றத்தைத்தான் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ளப் போகின்றார்களா?

எமது கட்சியை பலர் பல தடவை பலவீனப்படுத்த முயற்சித்தனர் அவற்றையெல்லாம் கண்டு நாம் அஞ்சியோடவில்லை. மக்களுடன் நின்று உழைத்ததனால் மக்கள் பிரதிநிதிகளாக்கப்பட்டு மக்களது அதிக ஆதரவை பெற்றுக்கொண்டுள்ளோம்.

தமிழ் மக்களுக்கான நிரந்தர உரிமைகளையும் தேவைகளையும் பெற்றுக்கொடுக்கும் வரலாற்று நிகழ்வை வரலாற்றுப் புத்தகத்தில் பதிந்து கொடுப்பவர் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா என்பவராகவே இருக்கும். இதற்கான அதிகாரத்தை மக்கள் அவருக்கு கொடுப்பார்கள் என நம்புகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# சிங்கப்பூரில் கணனி மாநாடு

(கொழும்பு)

சிங்கப்பூரில் கணனி தொடர்பான செயற்பாடுகள், கணனி மற்றும் இணையத்தள செயற்பாடுகள் (Tamil Internet 2015) குறித்து இடம்பெறுகின்ற வருடாந்த மாநாடு இம்முறை தமிழ் மொழியில் சிங்கப்பூரில் எதிர்வரும் மே மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

மூன்று நாட்களடங்கிய இம்மாநாட்டில் சர்வதேச ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளை சமர்ப்பித்து அது தொடர்பில் ஆய்வுகளை சமர்ப்பிக்கும் பொருட்டு வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

கணனி மற்றும் இணையத்தள செயற்பாடுகள் குறித்து இடம்பெறுகின்ற 14 ஆவது மாநாட்டில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஒழுங்கமைப்பு குழுவின் தலைவர் எஸ்.மணியம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள இம்மாநாடு யூன் முதலாந் திகதி வரை இடம்பெறும். இந்தியா, மலேஷியா, அமெரிக்கா, இலங்கை மற்றும் சிங்கப்பூரிலிருந்து அரசாங்க அலுவலர்கள், அதிகாரிகள் மற்றும் தொழில்சார் வல்லுனர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

## கிழக்கு...

காங்கிரஸ்"க்கும் இடையில் 2012 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.

குறித்த உடன்பாட்டின்படி அடுத்த இரண்டு ஆண்டு பதவிக் காலத்திற்கு ஹாபிஸ் நசீர் அஹமட் முதலமைச்சராக பதவி வகிப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## சந்திரிக்காவின்...

பண்டாரநாயக்க சமாதியில் மலரஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

இதன் பின்னர் வைபவத்தில் கலந்து கொள்ளும் அதிதிகள் ஊர்வலமாக மைதானத்திற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

## துப்பாக்கிச்...

கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சக இராணுவ வீரர்களுடன் பயணித்துக்கொண்டிருந்த இவர், தன்னைத் தானே சுட்டுக்கொண்டாரா அல்லது அவரது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டதா என்பது தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவத்தில், மதவாச்சியைச் சேர்ந்த 22 வயதுடைய டபிள்யூ. எம்.கருணாரத்ன என்ற இராணுவ வீரரே உயிரிழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர்...

ஹக்கீம் ஒழிக, வாக்களிக்காத ஹாபிஸ் நஸீர் அஹமட்டுக்கு முதலமைச்சர் பதவியா?, பெருந்தொகை வாக்குகளை வழங்கிய சாய்ந்தமருது மக்கள் சார்பில் ஒருவருக்கு முதலமைச்சர் பதவி வழங்கக்கூடாதா?, ஹக்கீமே உனது துரோகத்தனத்துக்கு முடிவில்லையா? போன்ற கோசங்களை எழுப்பியவாறு மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் ஹக்கீமின் கொடும்பாவியை எரிக்க முற்பட்டபோது அங்கு குவிந்த கல்முனை பொலிஸார் அதை எரிக்கவிடாது தடுத்தனர். இதனால் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. பொது மக்களின் எதிர்ப்பையும் மீறி பொலிஸார் ஹக்கீமின் கொடும்பாவியை எரிக்கவிடாது, தமது வாகனத்தில் ஏற்றிச்சென்றனர்.

## நடக்காது...

உரையாற்றுகையில், வடக்கு, கிழக்கு போன்று ஏனைய பிரதேசங்களிலும் இராணுவ குறைப்பிற்கு இடமில்லை.

ஆனாலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை பெற்றுக் கொடுத்து தேசிய பாதுகாப்பையும் பலப்படுத்த வேண்டுமே தவிர தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்களை சுயநல அரசியலுக்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டாம். மேலும் கடந்த காலங்களில் இராணுவம் தொடர்பான தவறான கருத்துக்களும் ஊடகங்கள் மூலம் பரப்பப்பட்டுள்ளது. எனவே தமிழ்மக்களின் பிரச்சினைகள் மற்றும் இடையூறு தொடர்பிலும் அரசு என்ற வகையில் கவனம் செலுத்தி இதற்கு தீர்வொன்றையும் பெற்றுத்தரும். அதேசமயம் இராணுவ முகாம்களும் எந்தவிதத்திலும் அகற்றப்படமாட்டாது எனவும் திட்டவட்டமாக அவர் மேலும் தெரிவித்தார்.

## உள்நாட்டு...

மைத்திரிபாலவுக்கு சீன உதவி வெளிவிவகார அமைச்சர் தனது வாழ்த்தைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியுடன் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் ஜெயந்த தனபால, வெளிவிவகார அமைச்சரின் செயலாளர் சித்திராங்கனி வாகிஸ்வர ஆகியோர் உடனிருந்தனர்.

அதேவேளை இலங்கையின் உள்விவகாரங்களில் தாம் தலையிடப்போவதில்லை என்று அறிவித்துள்ள சீனா, இலங்கையைப் பயன்படுத்தி, வேறு எந்த நாடுகளுக்கும் எதிராக தாம் செயற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது. இரண்டுநாள் பயணமாக இலங்கை வந்துள்ள சீனாவின் உதவி வெளிவிவகார அமைச்சர் லியு ஜியன் சோ நேற்று செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார். இலங்கையுடனான பொருளாதார ஒத்துழைப்புக்களை தாம் தொடர்ந்து முன்னெடுப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கைக்கு சென்ற விடயம் குறித்து இந்தியா கவலை வெளியிட்டிருந்தது. வேறு எந்த நாடுகளுடனும் பகைத்துக்கொள்வதற்காக சீனா இலங்கையைப் பயன்படுத்தவில்லை. இலங்கையின் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மார்ச் மாதம் சீனாவுக்கு வரவுள்ளார்.

இதேபோன்று இந்தியப் பிரதமரது வருகையையும் நாம் எதிர்பார்க்கின்றோம். இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திக்கு புதிய அரசு ஒப்புதல் அளித்துள்ளதை நாம் வரவேற்கிறோம். அதேபோல ஏனைய திட்டங்களையும் முன்னெடுக்க அந்த அரசுடன் நாம் கலந்துரையாடிவருகிறோம் என்றார்.

## புதிய அரசின்...

பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலம் முடிந்து சில காலம் சென்ற பின்னர் இவ்வளவு வேகமாக இவ்விரு நாடுகளுக்குமிடையில் பேணப்படும் உறவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உள்ளது என தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் நிஷா பிஸ்வால் உறுதிப்படுத்தியுள்ளார். இவர் தனது உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு இவ்வார ஆரம்பத்தில் இலங்கை வந்து சூழலியல் மாற்றங்களை அவதானித்து இக்கருத்தினை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

துணைச் செயலாளர் நிஷா பிஸ்வால் தனது விஜயத்தின் போது ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டார். அதன் போது கருத்து தெரிவித்த அவர், இலங்கையில் அதன் உண்மையான திறனை உணர உதவ உதவுவோம் என்ற சவாலுக்கு கீழ் அதனை உண்மைப்படுத்தும் வகையில் இலங்கையுடன் இணைந்து சேவையாற்ற அமெரிக்கா ஆர்வத்துடன் இருப்பதாகத் தெரிவித்தார்.

புதிய தரத்திலான இணக்கம் நட்புறவினை இரு நாடுகளுக்குமிடையில் உயர்த்துவது எம் அனைவரினதும் தேவை என கடந்த 2 ஆம் திகதி துணைச் செயலாளர் நிஷா பிஸ்வாலுடன் இடம்பெற்ற சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

வொஷிங்டனில் தனது விஜயத்தில் அமைச்சர் எதிர்வரும் பெப்ரவரி 11 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் 5 மணி வரை வோஷிங்டனில் அமைந்துள்ள சர்வதேச சமாதான அறக்கட்டளை நிலையத்தில் உரை நிகழ்த்தவுள்ளார்.

அங்கு கருத்து தெரிவிக்கவுள்ள அமைச்சர், இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகள் மற்றும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இடம்பெறவுள்ள சவால்கள் தொடர்பிலும் தெரிவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசியக் கொடி விவகாரம் பிரதேசசபையில் தீர்மானம் இல்லை

## உண்மையை உரைக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்

(யாழ்ப்பாணம்)

சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைவாகவே சுதந்திர தினத்தன்று நல்லூர் பிரதேச சபை வளாகத்தில் தேசியக் கொடி ஏற்றப்படவில்லை என அதன் தவிசாளர் வெளியிட்ட கருத்தை வன்மையாகக் கண்டிப்பதாக நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அம்பலம் ரவீந்திரதாசன் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையில் சபை தீர்மானத்தை காரணம் காட்டி தவிசாளர் வெளியிட்ட கருத்து தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 4ஆம் திகதியன்று தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் நாடுமுழுவதும் மிக எளிமையாகவும் அதேவேளை சிறப்பாகவும் நடைபெற்றிருந்தன.

நாட்டின் அனைத்து அரச அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களிலும் தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்த போதும் அன்றைய தினம் நல்லூர் பிரதேச சபை வளாகத்தில் தேசியக் கொடி ஏற்றப்படாமல் இருந்தது.

இந்த விடயம் பாதுகாப்பு தரப்பின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பிரதேச சபைத் தவிசாளரிடம் அதற்கான காரணத்தைக் கோரியிருந்தனர்.

இதன்போது தவிசாளர் வெளியிட்ட கருத்தை மறுத்து சபையின் எதிர்க்கட்சி தலைவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தேசிய சுதந்திர தின நிகழ்வுகளுக்கான விசேட ஏற்பாடாக நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்களுக்கான எந்தவொரு கூட்டமும் அண்மைய நாட்களில் நடைபெறவில்லை.

சுதந்திர தினத்தில் தேசியக் கொடி ஏற்றுவதற்கான எந்தக் கருத்து பரிமாற்றங்களும் எதிர்த் தரப்பினரிடம் மட்டுமன்றி, தனது கட்சி உறுப்பினர்களிடத்திலும் கூட எவ்வித கருத்தையும் தவிசாளர் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை ஆணித்தரமாக கூறிவைக்க விரும்புகிறேன்.

அவ்வாறிருக்க குற்றப் புலனாய்வு பிரிவினரின் விசாரணையில் சபையின் தீர்மானத்துக்கு அமைவாகவே தேசியக் கொடி ஏற்றப்படவில்லை என தவிசாளர் கூறியிருப்பதன் மூலம் சபையின் ஏனைய உறுப்பினர்கள் அனைவர் மீதும் தனது குற்றச்செயலுக்கான பழியைச் சுமத்த அவர் முயன்றுள்ளார்.

இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் சபை உறுப்பினர்களின் எந்த ஆலோசனையும் பெறாது தவிசாளர் பல திட்டங்களை மேற்கொண்டதில் கணிசமான முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. அவை இப்போது தெரிய வந்திருக்கின்றன.

இவ்வாறான தான்தோன்றித்தனமான செயற்பாடுகளிலிருந்து இனியாவது தவிசாளர் விலகிக் கொள்ள வேண்டும். தவறின் அனைத்து சக உறுப்பினர்களுடனும், இணைந்து தவிசாளருக்கெதிரான நம்பிக்கையில்லாப் தீர்மானமொன்றைக் கொண்டு வர இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.


# இழந்து போனது மீண்டு வந்தது

கடந்த 2009 ஆம் ஆண்டு காலப் பகுதில் யுத்த சூழ்நிலை காரணமாகக் காணாமற் போனதாகக் கூறப்பட்ட தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்துக்குச் சொந்தமான லொறி ஒன்று களுத்துறைப் பகுதி வாகன விற்பனை நிலையம் ஒன்றில் கடந்த புதன்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டது.

களுத்துறைப் பகுதியில் உள்ள மோட்டார் வாகனங்கள் விற்கும் நிறுவனம் ஒன்றில் சம்பந்தப்பட்ட லொறி நிற்பதாகக் கிடைத்த தகவலையடுத்து இந்து, பௌத்த கலாசாரப் பேரவையின் பொதுச்செயலாளரும், சட்டத்தரணியுமான இராமச்சந்திரனின் உதவியுடன் சங்கத்தின் தலைவர், உப தலைவர், பொதுமுகாமையாளர், வர்த்தக முகாமையாளர் அடங்கிய குழுவினர் களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். இதனையடுத்து களுத்துறை பொலிஸ் நிலைய அதிகாரி உள்ளிட்ட குழுவினர் அங்கு சென்று லொறியை மீட்டனர்.

அத்துடன் அந்த விற்பனை நிலையத்தின் உரிமையாளரான பெண் ஒருவரையும் கைது செய்தனர். கைதுசெய்யப்பட்ட பெண்ணின் கணவர் ஏற்கனவே திருட்டு வாகனம் விற்பனை செய்தமை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மாணவர்கள் மறியல் போர்; ஆசிரியர்களை நியமிக்க கோரி



ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்கக் கோரி யாழ்.புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலய மாணவர்கள் பாடசாலை வாயிலை மறித்து நேற்றுக் காலை வகுப்பு பகிஸ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டத்தினை அடுத்து பாடசாலைக்குச் சென்ற யாழ்.வலயக்கல்வி அதிகாரிகள் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுடன் பேச்சு நடாத்தி, எதிர்வரும் 16ஆம் திகதி பாடசாலைக்கு தேவையான ஆசிரியர்களை நியமிப்போம் என உறுதி மொழியை வழங்கியதால் மாணவர்கள் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

அதேவேளை எதிர்வரும் 16ஆம் திகதி ஆசிரியர்கள் நியமிக்கப்படாவிடின் 17ஆம் திகதி முதல் தாம் மீண்டும் போராட்டத்தில் குதிப்போம் என மாணவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் பெற்றோர் ஒருவர் கருத்து தெரிவிக்கும் போது,

இந்தப் பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 11 வரையிலான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இங்குள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற போல் இந்தப் பாடசாலையில் 16 ஆசிரியர்கள் கடமையாற்ற வேண்டும். ஆனால் இங்கு 11 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். இதில் இருவர் சங்கீத ஆசிரியர்கள், நால்வர் பகுதிநேர ஆசிரியர்கள், மிகுதி 5 பேரே அனைத்துப் பாடங்களும் கற்பிக்கும் ஆசிரியர்கள். இதனால் க.பொ.த சாதாரணதரம் மற்றும் தரம் 9, 10 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கு பிரதானமான பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதனால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இது தொடர்பாக பாடசாலை அதிபர் பல தடவைகள் யாழ் கல்வி வலயத்திற்கு தெரியப்படுத்தி ஆசியர்களை நியமிக்குமாறு கோரிய போதிலும் இதுவரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இறுதியாக அதிபர் கோரிய போது விசேட தேவையுடைய ஆசிரியர்களை நியமிக்கவா? என அதிகாரிகள் கேட்டுள்ளனராம். அதற்கு அதிபர் மறுப்புத் தெரிவித்துள்ளார். அதனை அடுத்து கடந்த 2ஆம் திகதி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என உறுதியளித்திருந்தனர்.

ஆனால் இன்று வரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. அதையடுத்தே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டோம் எனத் தெரிவித்தார். (03)

# கவிதைத் தொகுதி அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸர்மிலா ஸெய்யித்தின் இரண்டாவது கவிதைத் தொகுதியான 'ஒவ்வா'வின் அறிமுக நிகழ்வும் விமர்சன உரைகளும் யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்றம் கலைத்தூது அழகியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இன்று பி.ப 3.15 மணிக்கு கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், விமர்சன உரைகளை குகபரன், று.சுதாஜினி, வே. சுகிர்தினி (இந்து), கிரி ஷாந் ஆகியோர நிகழ்த்தவுள்ள னர்.

இந் நிகழ்வுக்கு படைப்பாளிகள், இலக்கிய ஆர்வலர்கள், வாசகர்கள் நண்பர்கள், பொதுமக்கள் அனைவரையும் வருகை தருமாறு யாழ். இலக்கியக் குவியத்தின் செயலாளர் ஜெ. வினோத் அறிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்

## சிவம் ஜெயராணி

**(வீரமாணிக்கம் - மயிலிட்டி, தேவன்துறை)**



வீரமாணிக்கம், தேவன்துறை மயிலிட்டியை நிரந்தர முகவரியாகவும், இல. 126, ஸ்கந்தபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும், 4 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையை தற்காலிக முகவரியாகவும் கொண்ட சிவம் ஜெயராணி அவர்கள் 06.02.2015 அன்று காலமானார்.

அன்னார் ஐயாத்துரை ஈச்சம்மா தம்பதியினரின் அன்பு மகளும், தாமோதரம்பிள்ளை செல்லமுத்து தம்பதியினரின் மருமகளும், சிவம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற ஜெயராம் மற்றும் சிவராம், சிவாளினி, குலராம் ஆகியோரின் அன்புத்தாயாரும், கிருஸ்ணன் (லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும், பிரணவியின் பேர்த்தியும், கணேசலிங்கம், அற்புதராணி, அமிர்தலிங்கம் (லண்டன்), சின்ராசா எனப்படும் நடேசலிங்கம் (லண்டன்), சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (07.02.2015) பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோரியடி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.** (இ)

# பிரதேச செயலகங்களின் புதிய கட்டடங்கள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு, பிரதேச செயலகம் மற்றும் யாழ்ப்பாணம். பிரதேச செயலகம் என்பவற்றுக்கான புதிய கட்டடங்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை உள்நாட்டு அலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வடமராட்சிப் பிரதேச செயலகம் காலை 10.00 மணிக்கும், யாழ்ப்பாண பிரதேச செயலகம் பிற்பகல் 2.30 மணிக்கும் திறந்து வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

# டெங்கு அபாயம் வவுனியாவில் உச்சம்

(வவுனியா)

வவுனியா, நகரசபை மைதானத்தில் காணப்படும் கழிவு வாய்க்கால்களில் உள்ள வெற்றுப்போத்தல்கள், பொலித்தீன் பைகளினால் டெங்கு பரவும் அபாயம் உள்ளதாக மைதானத்தைப் பயன்படுத்தும் வீரர்களும், பொது மக்களும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, நகரசபை மைதானத்தின் கரையோரமாக நகரசபைக்குள் இருக்கின்ற கழிவு வாய்க்கால்களில் ஏராளமான வெற்றுப் போத்தல்கள், பொலித்தீன் பைகள், குப்பை கூழங்கள் காணப்படுகின்றன. வவுனியாவில் கடந்த சில நாட்களாகப் பெய்த மழை காரணமாக அவற்றில் நீர்தேங்கி நுளம்புகள் பெருகக் கூடிய நிலை உருவாகியுள்ளதுடன் கழிவு வாய்க்காலின் சில பகுதிகளில் துர்நாற்றமும் வீசுகின்றது.

இதனால் மைதானத்தில் உடற்பயிற்சிக்காக வருபவர்களும் விளையாட்டு வீரர்களும் நோய்த் தொற்றுக்கு உள்ளாகக் கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கவனம் செலுத்தி நகரசபை சுத்திகரிக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியா நகரசபைக்குட்பட்ட சில பகுதிகளில் டெங்கு நுளம்புகள் பெருமிடங்கள் அடையாளம் காணப்பட்டு அவை சுத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கஞ்சாவுடன் சிறுவன் கைது

(கரணவாய்)

கஞ்சா பொதியுடன் சிறுவன் ஒருவன் கைது செய்யப்பட்டிருக்கிறார். வடமராட்சி, புலோலிப் பகுதியில் வைத்து இவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருக்கிறார். இச் சிறுவன் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட போது இவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன். எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். (18)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 பெப்ரவரி 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.